Registered as a Newspaper · பக்கங்கள் 16 · விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஆவணி 11 · [27-08-1993] · வெள்ளிக்கிழமை · ஓசை 190

## மாவீரர்களின் இறுதி ஊர்வல ஒழுங்குகள் அறிவிப்பு

கிளாலிக்கடல்நீரேரியில் நேற்று அதிகாலை காவியம்படைத்த மாவீரர்களின் உருவப் படங்களும், வித்துடல்களும் இன்று யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன. கடற்கரும்புலி மேஜர் நிலவன் [வரதன்], கடற்கரும்புலி கப்டன் மதன் ஆகியோரின் உருவப்படங்களும் கடற்புலிகள் கப்டன் சிவா, லெப்டினன்ட் பூபாலன், 2வது லெப்டினன்ட் சுரேந்தர் ஆகியோரின் வித்துடல்களுமே மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன. இவ் ஊர்வல அஞ்சலி நாகர்கோவில் பகுதியில் காலை 7.30 முதல் 8.00 மணிவரையும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் அங்கிருந்து எழுதுமட்டுவாழ் வீதிவழியே எடுத்துச் செல்லப்பட்டு காலை 10.00 மணிமுதல் 10.30 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் வைக்கப்பட்டபின்னர் கண்டிவீதி, கைதடி, நாவற்குழி, அரியாலை, பாஷையூர், குருநகர்ப் [6ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலிக் கடலில் மூன்று மணிநேர உக்கிரசண்டை

# இரு நீருந்து விசைப்படகுகள் மூழ்கடிப்பு; 10 கடற்படையினர் பலி; பலர் படுகாயம்

## கடற்புலி கரும்புலிகள் வீரசாதனை

நேற்று அதிகாலை கிளாலிக் கடற்பரப்பில் மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலி வீரர்களுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் மத்தியில் நிகழ்ந்த உக்கிரமான கடற்போரில் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு அதிநவீன நீருந்து விசைப்படகுகள் நாசமாக்கப்பட்டன. வெடிமருந்து ஏற்றிய விசைப் படகுகளை மோதவிட்டு கடற்புலிக் கரும்புலிகள் இருவர் இந்த மகத்தான சாதனையைப் புரிந்து வீரச் சாவை அணைத்துக் கொண்டனர். நாசமாக்கப்பட்ட நீருந்து படகுகளில் இருந்த அதிகாரி உட்பட 10க்கும் மேற்பட்ட கடற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்ட கடற்படையினரின் 4 சடலங்களை கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர். நீருந்துப்படகுகளில் பொருத்தப்பட்டிருந்த அதி சக்தி வாய்ந்த இரண்டு 50 கலிபர் கனரக இயந்திர துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இரண்டு கரும்புலி வீரர்களுடன் மூன்று கடற்புலிகளும் இந்தக் கடற்சண்டையில் வீரச்சாவையெய்தினர்.



நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கிளாலி கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த மக்கள் மீது தாக்குதலை நடத்தி அவர்களை வெட்டிக் கொல்லும் நோக்குடன் ஐந்து நீருந்துப் படகுகளில் வந்த சிறிலங்கா கடற்படையினரை கடற்புலி வீரர்கள் இடைமறித்து சமர் புரிந்தனர். கடற்சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருந்த சமயம், கடற்புலிகளைச் சேர்ந்த கரும்புலி வீரர்களாகிய, மேஜர் வரதன், கப்டன் (6ஆம் பக்கம் பார்க்க)

## இருகரும்புலிகள் உட்பட 5 கடற்புலிகள் வீரச்சாவு



தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் கடற்புலிகளைச் சேர்ந்த கரும்புலி, மேஜர், நிலவன் [வரதன்]

மான இரண்டு அதிநவீன நீருந்து விசைப்படகுகள் நாசமாக்கப்பட்டன. வெடிமருந்து ஏற்றிய விசைப் படகுகளை மோத விட்டு கடற்புலிக் கரும்புலிகள் இருவர் இந்த மகத்தான சாதனையைப் புரிந்து வீரச் சாவை அணைத்துக் கொண்டனர். நாசமாக்கப்பட்ட நீருந்து படகுகளில் இருந்த அதிகாரி உட்பட 10க்கும் மேற்பட்ட கடற்படையினர் ஸ்தலத்திலேயே கொல் லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்ட கடற்படையினரின் 4 சடலங்களை கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர். நீருந்துப்படகுகளில் பொருத்தப்பட்டிருந்த அதி சக்தி வாய்ந்த இரண்டு 50 கலிபர் கனரக இயந்திர துப்பாக்கிகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இரண்டு கரும்புலி வீரர்களுடன் மூன்று கடற்புலிகளும் இந்தக் கடற்சண்டையில் வீரச்சாவையெய்தினர்.



கடற்புலிகள் கரும்புலி மேஜர்
**நிலவன் (வரதன்)**



கடற்புலிகள் கரும்புலி கப்டன் **மதன்**

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கிளாலி கடற் பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த மக்கள் மீது தாக்குதலை நடத்தி அவர்களை வெட்டிக் கொல்லும் நோக்குடன் ஐந்து நீருந்துப் படகுகளில் வந்த சிறிலங்கா கடற்படையினரை கடற்புலி வீரர்கள் இடைமறித்து சமர் புரிந்தனர். கடற்சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருந்த சமயம் கடற்புலிகளைச் சேர்ந்த கரும்புலி வீரர்களாகிய மேஜர் வரதன், கப்டன்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இருகரும்புலிகள் உட்பட 5 கடற்புலிகள் வீரச்சாவு

நேற்று கிளாலிக் கடற்பரப்பில் மக்களைக் காக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் கரும்புலிகள் இருவர் சிறிலங்கா கடற்படையினர் நீருந்து விசைப்படகுகள் மீது தமது வெடிமருந் தேற்றிய படகுகளை மோத விட்டு அவற்றை மூழ்கடித்து வீரசாதனை படைத்துள்ளனர்.

இவ் வீரசாதனை படைத்த கடற்புலிகளின் கரும்புலிகளின் விபரம் வருமாறு:

ஃ கடற்புலிகள் கரும்புலி மேஜர் நிலவன்/வரதன் கந்தசாமி இராமச்சந்திரன் கள்ளிச்சை, வடமுனை மட்டக்களப்பு.

ஃ கடற்புலிகள் கரும்புலி கப்டன் மதன் சீனிவாசன் சிவகுமார் 143/11 எல்லை வீதி, மட்டக்களப்பு.

இம் மோதலின் போது மேலும் மூன்று கடற் புலிகள் வீரச்சாவடைந்தனர் வீரச்சாவடைந்தோர் விபரம்வருமாறு

ஃ கடற்புலி கப்டன் சிவா முத்துலிங்கம் கருணைநாதன் இரணைப்பாலைபுதுக் குடியிருப்பு சொந்த இடம் குச்சவெளி, திருக்கோணமலை

ஃ கடற்புலி லெப்டினன்ட் பூபாலன் சுந்தரராசா பாஸ்கர் நாவற் கோவில் வடக்கு.

ஃ கடற்புலி 2-ம்லெப்டினன்ட் சுரேந்தர், சபாரட்ணம் சிவாகரன் கைவேலி, புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு, சொந்த இடம்: திருக்கோணமலை.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்

## இரு நவீன 50 கலிபர் துப்பாக்கிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட இரு நீருந்து விசைப் படகில் இருந்தும், இரு நவீன 50 கலிபர் துப்பாக்கிகள் கடற்புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கலிபர் துப்பாக்கிகளுக்கான 1000க்கும் மேற்பட்ட ரோட்டாக்களும்மீட்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர தானியங்கித் துப்பாக்கிகளும், ஏனைய கடற்படைத் தளபாடங்களும் கிலவும் மீட்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

## அகோர குண்டு வீச்சு; எறிகணைத் தாக்குதல்

(தென்மராட்சி)


கிளாலிப்பகுதியில் நேற்று நண்பகல் வரை படையினர் கடும் எறிகணைத்தாக்குதலை நடத்தியவண்ணம் இருந்தனர். இதேவேளை விமானப்படையின் இரு புக்காரா விமானங்களும் அவ்ரோ விமானமும் உலங்கு வானூர்தியும் கடும் வான்தாக்குதலைமேற்கொண்டன. இவ்விமானங்கள் மீது கடற்புலியின் மகளிர் அணியினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

கிளாலி, அல்லிப்பளை பகுதியில் விமானப்படை நடத்திய கடும் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார். படகுகள் சில சேதமடைந்தன. காலை 6.45 மணி முதல் இப்பகுதியில் புக்காரா விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசின ரொக்கட் தாக்குதலையும் நடத்தின. இதனால் பொருள்கள் ஏற்றிவந்த படகோட்டி

(6ஆம் பக்கம் பார்க்க)



தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் கடற்புலிகளைச் சேர்ந்த கரும்புலி மேஜர் நிலவன் [வரதன்]



கடற்புலிகள் கைப்பற்றிய 50 கலிபர் துப்பாக்கியில் ஒன்றையும் ஏனைய இராணுவ உபகரணங்களையும் படத்தில் காணலாம்.

# மக்களை தாக்கவந்த கடற்படையை கரும்புலி வீரர்கள் தாக்கினர்

## விசேட தளபதி சூசை பேட்டி

(கிளாலி)

நாகதேவன் துறையிலிருந்து நேரெதிராக நின்ற எமது ஆறு படகுகள் கடற்படை படகுகளை தாக்க தயாராக நின்றன. ஆனால் அப் படகுகளை எதிர்கொள்வதை தவிர்த்த இரு கடற்படை படகுகள் பொது மக்கள் போக்குவரத்து பாதையைநோக்கிச் சென்றன. அந்த இரு கடற்படைப் படகுகளையும் தாக்க வேண்டும் என்ற நோக்கில் எமது கரும்புலிகள் தாக்குதலுக்கு தயாராகினர். இவ்வாறு கடற்புலிகளின் விசேட தளபதி சூசை நேற்று கிளாலியில்வைத்து புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியின்போது தெரிவித்தார்.

நேற்றுக்காலை கிளாலி கரையில் கடும் விமானத் தாக்குதலின் மத்தியில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படையின் இரு நீருந்து விசைப் படகுகளின் பாகங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளிடையே கடற்புலிகளின்விசேட தளபதி சூசை கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தார் அப்போது அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது,

''அண்மைக்காலமாக கிளாலி கடலில் நடந்த சம்பவங்களில் இதுவரை 200க்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்துள்ளனர். கரும்புலிகளாக நேற்று சென்ற மதனும், வரதனும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். கிளாலி கடற் பாதுகாப்புப் பணியில் இவர்கள் ஒருவருடமாக இருந்திருக்கின்றனர்.

இந்த ஒரு வருடமாக இங்கு நடந்த சகல நிகழ்வுகளையும் இவர்கள் நேரடியாக கண்டனர் அவர்களது சொந்த வாழ்விலும் வரதனைப் பொறுத்தவரையில் அவர்களது உறவினர்கள் பொலநறுவையில் உள்ள கிராமத்தில் படைகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இவை அவர்களை கரும்புலியாக்கியது.

கடற்படையினரின் படகுகள் வேகம் கூடியவை 35-40 கடல் மைல் வேகமுடையவை. எமது படகுகள் 20-30 கடல் மைல் வேகமுடையவை. கிளாலிக்கடலில் ஒன்றரை அடி ஆழத்திலும் செல்லக்கூடிய படையினரின் நீருந்து விசைப்படகு நாம் தாக்குதலுக்கு சென்ற போது கடற்படை படகுகள் 10 நிமிடம், 15 நிமிடம் என்று மோதிவிட்டு தம் தரப்பில் சேதம் ஏற்பட்டால் உடனடியாகவே திரும்பி வேகமாக எம்மிடமிருந்து தப்பி சென்று விடும். இவ்வாறு கடற்படை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### "நீமியா" - விலைகுறைப்பு

உழுது, எருவிட்டு, உரம் வைக்கக் காத்திருக்கும் விவசாயப் பெருமக்களே வேப்பம் பிண்ணாக்குக் கொண்டு தயாரான உச்சப் பலன் பயக்கும் அடிக்கட்டு உரம் நீமியா. பயிர் பாதுகாப்புச் சாதனம் கூட. விலை கிலோ ரூபா 17/- 20 கிலோ பொதி ரூபா 300/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது.

- மில்க்வைற் (சி-7280)

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா 6/-, நன்றாகக் காய்ந்த வேப்பம் பழக்கோது தட்புரவானது கிலோ ரூபா 2/- "மில்க்வைற்" (சி/7256)

### சமூகக்கல்வி வகுப்பு

O/L Y R 10 சமூகக்கல்வி வகுப்புகள் நடைபெறுகின்றன. மீட்டலும், படவேலைப் பயிற்சியும் இடம்பெறும் ஆசிரியர். M. இக்னேசியஸ், சம்றொக் அக்கடமி யாழ். சுண்டுக்குளி. (5784)

### வீடு. காணி விற்பனைக்கு

அல்வாய் தெற்கு, குமிழடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கிணறு, வீட்டுடன் காணி மூன்று பரப்பு 9½ குழியும், அருகில் தென்னங் காணி இரண்டு பரப்பு பதினைந்து குழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- அ. காசிப்பிள்ளை துலாவை, அல்வாய் தெற்கு, அல்வாய் (5778)

## 1-ஆம் வருட நினைவஞ்சலி



முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் சிறப்புத் தளபதியும். அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளருமான

### லெப். கேணல் ராஜன்

(சோமசுந்தரம் சற்குணம்-மாதகல்)

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 14-02-1966 | 27-08-1992 |

பொங்கும் கடலும் தவழும் தென்றலும்
தாலாட்டுப் பாடிடும் மாதகலிலே!
மங்காத மணி விளக்காய் வந்துதித்த
மாசற்ற புதல்வன் சற்குணனே!

---

## விசேட கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

Introduction to Computer
and
BASIC Language

**ஆரம்பம்: 05-09-1993**

காலம் 4 மாதம்

"உங்கள் உயர் கல்வியை எதிர்காலத்தில் இலகுவாக தொடரும் வண்ணம் கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்களில் இணைந்துகொள்ளுங்கள்"

### உங்களின் நலன்கருதி:

- ★ திங்கள், புதன், வெள்ளி — 3-00 — 4-00
  சனி, ஞாயிறு — 3-00 — 4-00
- ★ தவணை முறையிலான குறைந்த கட்டணம்
- ★ தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகுவான விரிவுரைகள்
- ★ கூடிய செய்முறைப் பயிற்சியும், பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்த சான்றிதழும்.

விவரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**
14, St Peter's Lane, Hospital Road.
Jaffna. (சி-7286)

## நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தில்லைச் சிவனின் கவிதைச் சுயசரிதை 'நான்' வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகாமையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் இடம்பெறும்.

ச. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் செங்கை ஆழியான் வெளியீட்டுரை நிகழ்த்துவார். ஆ. சபாரத்தினம் சோ பத்மநாதன், ச. சத்தியசீலன் ஆகியோர் கருத்துரை வழங்குவர் இரா. சிவச்சந்திரன் நன்றியுரை வழங்குவார்.

### நியூ யாழ் சைனீஸ்

- ★ கோழிப் புரியாணி
- ★ நூடில்ஸ்
- ★ பிறைற்றைஸ்
- ★ சூப் வகைகள்
- ★ RICE & CURRY

மற்றும்
சைனீஸ்
உணவு வகைகளுக்கு

**நியூ
யாழ் சைனீஸ்**

124, 1 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம் (5768)

## BECON

### 94 A/L DAY CLASS

**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

| ஆசிரியர்கள் | பாடங்கள் | செவ் / வியா. | சனி ஞாயிறு |
|---|---|---|---|
| பசில் | வர்த்தகம் | 8—10 | — |
| வரதராஜன் | பொருளியல் | 10—12 | — |
| சௌந்தி | கணக்கியல் | 12—2 | — |
| S S, மனோகரன் | அளவையியல் | — | 10—11 |
| மீரா | தமிழ் | — | 11—12 |
| பாலா | இந்துநாகரிகம் | — | 9—10 |
| பஞ்சாட்சரம் | அரசியல் | — | 8—9 |
| நிரஞ்சன் | கிறிஸ்தவம் | — | 9—10 |
| யேசப | புவியியல் | — | 10—11 |

**ஆரம்பம்: 2. 9. 93 வியாழன் 8.00 மணி**

(சி-7285)

### வெலிங்டன் சந்தியில்!

LINKCO

---

நம்பிக்கையுடன் வருக! மனநிறைவுடன் செல்க!!

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட
தரம் நிறைந்த பொருட்கள்
நவநாகரிக சூழல் - புதிய அமைப்பு

## எழிலகம்

மணிக்கூட்டு வீதி - யாழ்ப்பாணம்.

(சி-7289)

## "சித்தமருத்துவம் மக்கள் மயப்படுத்தல்"

எமது திணைக்களமும் சித்தவைத்தியக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் மேற்படி கருத்தரங்கு ஆகஸ்ட் 29ஆம், 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இடம்பெறும்

இக்கருத்தரங்கில் பங்குபற்ற எம்மோடு தொடர்பு கொண்ட அனைவரையும் 29ஆம் திகதி காலை 8.30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்

சுந்தரம் டிவகலாலா
பிரா/ உ.க.ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-7294)

## பதவி வெற்றிடம்

யாழ் நகரின் மத்தியில் இயங்கிவரும் முன்னணி உணவகத்துக்கு மேலைத்தேய, கீழைத்தேய, சைனீஸ் உணவு வகைகள், சிற்றுண்டிகள் தயாரிப்பில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்கள், அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும். தொடர்பு, சுவையருவி, யாழ்ப்பாணம்.

(சி/7291)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-27

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்- பேசாலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஏழாலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அன்புசெல்வராசா மாஸ்ரர்** (சின்னத்துரை செல்வராசா - காங்கேசன்துறை)

**2-ம் லெப். எலிசபெத்** (சிறீரஞ்சனி சிறீஸ்கந்தராசா- உடுத்துறை வடக்கு - தாளையடி)

அல்லைப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சாம்சன்** (செல்லப்பா குலேந்திரன் - நாவாந்துறை - யாழ்ப்பாணம்)



முன்னாள் யாழ் மாவட்டத் தளபதியும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவின் சிறப்புத் தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளருமான

## லெப். கேணல் ராஜன்
(சோமசுந்தரம் சற்குணம்-மாதகல்)

பிறப்பு 14-02-1966 — வீரச்சாவு 27-08-1992

பொங்கும் கடலும் தவழும் தென்றலும்
தாலாட்டுப் பாடிடும் மாதகலிலே!
மங்காத மணி விளக்காய் வந்துதித்த
மாசற்ற புதல்வன் சற்குணனே!

தங்கமகன் என உனை ஈன்ற
நாம் மகிழ்ந்திருக்க!
எங்கள் ஆருயிரான என்றே
உடன் பிறப்புக்கள் நாம் இன்புற்றிருக்க!
எங்கள் மாமா எங்கள் சித்தப்பா
என்று பெருமை பேசியே களிப்புற்ற!
எம் மழலைகளின் எண்ண அலைகள்
ஏன் தான் சிதைக்கப்பட்டதோ?

அறுபத்தி ஆறில் அவதரித்த எம் சற்குணனே
இருபத்தி ஆறு ஆண்டுகளில் எம்மை விட்டு
பிரிந்து நீர் ஓடியதும் ஏன்?

அந்நியன் காலடி ஓசை கேட்டு
அகதிகளாக நாம் வெளியேற
அந்நிய நாய்களை மண்ணினிலிருந்து வெளியேற்ற
உறுதியுடன் புறப்பட்ட வீரப்புதல்வனே!
உன்னைப் பெற்ற தாய் மண் தான்
உன் உடலையும் தாங்கி நின்றதையா!

★ ★

எண்பத்தி நாலில் தன்மானத் தலைவனின்
படையணியோடு இணைந்து கொண்டவனே!
சாந்தம் நிறைந்திட்ட சற்குணம் நீ
வீரம் மிளிர்ந்த வேங்கை ராஜன் ஆகினாய்!
தளபதி ராஜன் என்ற பெயர் கேட்டே
சிறிலங்காவின ஓநாய்க் கூட்டமும்
வந்து சென்ற வல்லாதிக்கப் படைகளும்
கூடியே திரியும் துரோகக் கும்பலும்
கதி கலங்கியதை மறந்திடலாமா!
தலைவனின் அன்புச் சூரியனே!
மூத்த தளபதிகளின் வலக்கரமே!
சக தோழர்களின் உறைவிடமே!
மக்கள் மனதில் நிறைந்தவனே!

★ ★

நீ எம்மை விட்டு பிரியவும் இல்லை
எம் மனதில் இருந்து அகலவும் இல்லை
மீண்டும் மீண்டும் வந்திடுவாய்
தரணி போற்றும் தமிழீழத்தில்
எங்களோடு ஒன்றாகி நின்றிடுவாய்!

"மரணத்தை வென்ற மாவீரரே
மண்ணில் நிலயான சொத்துக்கள்"

14-9-93 அன்று விளையாட்டரங்குவீதி கல்வியங்காட்டு எமது இல்லத்தில் நடைபெறும் திதி நிகழ்விலும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமபடி சக போராளிகளையும், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவோடு வாழ்ந்திடும்
குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.


(சராவீதி)
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு. (5772)


| ஆசிரியர்கள் | பாடங்கள் | செவ் / வியா. | சனி ஞாயிறு |
|---|---|---|---|
| பசில் | வர்த்தகம் | 8—10 | — |
| வரதராஜன் | பொருளியல் | 10—12 | — |
| சௌந்தி | கணக்கியல் | 12—2 | — |
| S S, மனோகரன் | அளவையியல் | — | 10—11 |
| மீரா | தமிழ் | — | 11—12 |
| பாலா | இந்துநாகரிகம் | — | 9—10 |
| பஞ்சாட்சரம் | அரசியல் | — | 8—9 |
| நிரஞ்சன் | கிறிஸ்தவம் | — | 9—10 |
| யேசப் | புவியியல் | — | 10—11 |

**ஆரம்பம்: 2. 9. 93 வியாழன் 8.00 மணி**

(சி-7285)

**வெலிங்டன் சந்தியில்!**



# UNIKCO
## COMPUTER CENTRE

**Computer பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

- BASIC Language (including Graphics Sound & Files)
- PASCAL Language (பல்கலைக்கழகம் செல்ல விருப்பவர்கட்கு மட்டும்)
- d BASE III PLUS and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel. 5.5) and MS - DOS

வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம்: 29-08-93
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம்: 30-08-93

Equipment Used: ACER, ARC Computers (IBM Compatibles)

மேலதிக விபரங்களுக்கு:

**37, CLOCK TOWER ROAD, JAFFNA.**

(சி-7235)

ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள்
சைவ, அசைவ, கீழைத்தேச மேலைத்தேச
உணவு வகைகள் சிற்றுண்டி வகைகள்
சுவைமிகுந்த பாண் வகை தயாரிப்புக்கள்

வைபவங்களிற்கு
மன நிறை பரிமாறு சேவை
தூரம், நேரம், தொகை எமக்குத் தடையல்ல.

**சுவை! தரம்!! சுகாதாரம்!!!**

ஒருங்கிணைந்த

# சுவையருவி

**மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.** — **பேரூந்து நிலையம், நெல்லியடி.**

குறிப்பு: சைவ, அசைவ உணவு வகைகள் வெவ்வேறு சமையலறைகளில் தயாரிக்கப்பட்டு தனித்தனி பகுதிகளில் பரிமாறப்படுகின்றது (சி-7293)


## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-27

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்-பேசாலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஏழாலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அன்பு செல்வராசா மாஸ்ரர்** (சின்னத்துரை செல்வராசா - காங்கேசன்துறை)

**2-ம் லெப். எலிசபெத்** (சிறீரஞ்சனி சிறீஸ்கந்தராசா- உடுத்துறை வடக்கு - தாளையடி)

அல்லைப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சாம்சன்** (செல்லப்பா குலேந்திரன் - நாவாந்துறை - யாழ்ப்பாணம்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது செங்கலடிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளி. மாவடிவேம்புப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மற்றுமொருவர் ஆகிய 02 தமிழர்கள்.

ஊர்காவற்துறையிலிருந்து மண்டைதீவை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறிய நாளிலிருந்து இதே தினம் வரை இப்பகுதியிலும், மண்கும்பான், அல்லைப்பிட்டி மற்றும் இதரதீவகப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட 72க்கு மேற்பட்ட தமிழர்கள். இதேசம்பவத்தின் போது மண்டைதீவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு முகமூடி நபரின் தலையாட்டலின் காரணமாக தேசவிரோதசக்திகளினால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் அல்லைப்பிட்டி வீடொன்றினுள் கருகியநிலையில் சடலமாக மீட்கப்பட்ட மண்கும்பான் 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு யாழ் - மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். அருளையன்/பிரதீப்** (சாமித்தம்பி மகிந்தன்- வாழைச்சேனை - மட்டு)

**கப்டன் கணேசன்/கணேஸ்** (புண்ணியமூர்த்தி ரகு - 2-ம் படிவம், கந்தளாய்-திருமலை)

**கப்டன் வன்னியன்** (கணபதிப்பிள்ளை கணநாதன் - துணுக்காய் - மாங்குளம்)

**லெப். தயாபரன்/பார்த்தீபன்** (சிவசுப்பிரமணியம் சிவகுருநாதன் - யோகபுரம் - மாங்குளம்)

முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைத்தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிப் பொறுப்பாளருமாகிய,

**லெப். கேணல் ராஜன்/ரோமியோநவம்பர்** (சோமசுந்தரம் சற்குணம் - மாதகல் மேற்கு- யாழ்)

**2-ம் லெப் இளங்கோ/யோகராஜா** (பாஸ்கரன் பிரபாகரன் - காங்கேசன்துறை - யாழ்)

**கலைச்செல்வன்/குகன்** (இருதயநாதன் புனிதராசன் - 2-ம் குறுக்குத்தெரு - பருத்தித்துறை)

**அறிவழகன்** (நாகலிங்கம் சிவகுமார் - குரும்பசிட்டி- யாழ்)

**மதியழகன்** (நடராசா பூவிலிங்கம் - புலோப்பளை-பளை)

மட்டு - ஒத்தாச்சிமடத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் மதுபருக்கப்பட்டு, அடித்துக் கொலை செய்யப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7284)

நல்லூர் இளை நூலகம் யாழ்ப்பாணம்

# தமிழர் திருமணமும் சீதனமும்

தமிழ்நாடு, தமிழீழம், மொறிஷியஸ், மலாயா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் நிலையாகவும் உலகின் பிறநாடுகளிலே தற்காலிகமாகவும் வாழ்ந்து வரும் தமிழ்மக்கள் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாகத் தமக்கென ஓர் உரிமை நாட்டினைப் பெற்றிருக்காமையால், அவர்களின் மொழி, பண்பாடு என்பன படிப்படியாகச் சிதைவுறும் நிலை ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையினை மாற்றியமைக்கவும் உலக அரங்கிலே தமிழர் உரிமையோடு தலை நிமிர்ந்து நிற்கவும் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகளிலே தமிழீழம் முனைந்து நிற்பது பாராட்டப்படவேண்டிய ஒன்றேயாகும். வாழ்கின்ற காலத்தின் அவலங்களைக் களைந்தெறிய முற்படும் பொழுது, வாழ்ந்த காலத்தின் ஏற்ற இறக்கங்களிலிருந்து பாடங் கற்பதற்கும் எமது வரலாறு, காய்தல் உவத்தலின்றி ஆய்விற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும், உண்மை, நிலைநாட்டப்படுதலும் இன்றியமையாததாகும்.

தமிழரிடையே நிலவிவரும் சீதன வழக்கும் அதன் தீய விளைவுகளும் பற்றிய பேச்சு, இன்று பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. தமிழரின் திருமணமுறையும் அதனோடு எவ்வாறோ பின்னிப்பிணைந்து விட்ட சீதனமும் பற்றிய வரலாற்றுச் சான்றுகளைத் தேடுவது ஒரு வகையிலே புலமைசார் ஆய்வாகவே (Academic research) அமைந்துபெரும் பயன் விளைக்காது போதலுங்கூடும். எனினும் அதுவும் வேண்டப்படுவதே. இதனை மேற்கொள்வோர் தமிழர்தம் சமூகவியல் வாழ்வியல் பற்றிய ஆழமான நோக்கும் அறிவும் வாய்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும். இந்தக் கட்டுரை அத்தகைய எதிர்பார்ப்புக்களை எவ்வகையிலும் நிறைவு செய்யப்போவதில்லை என்பதை முதலிலேயே எச்சரிக்கையாகக் குறித்துவிட்டு தமிழிலக்கியங்களினூடாக மேலோட்டமான சில கருத்துக்களை முன்வைக்கின்றேன்.

## "தமிழர்" என்ற சொல்லின் கருத்துப் பரப்பு:

சங்ககாலம் என்று தமிழிலக்கியத் தோற்றக் காலத்தை அழைப்பதும், அக்காலத்திற்கு உரியன எனக் கொள்ளப்படும் இலக்கியங்களை "உள்ளதை உள்ளவாறே கூறுவன" எனப் பாராட்டுவதும் மரபுவழிப்பட்ட கருத்துக்களாய் இருந்து வருகின்றன. இவையிரண்டும் முழுமையான உண்மைகளல்ல என்பது இன்றுள்ள ஆய்வாளர்கள் பலரது முடிபாகும். தொல்காப்பியர் இலக்கிய வழக்கினைச் செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்று இரண்டாக வகைப்படுத்துவர். இவ்விரு வழக்குகளிலும் இடம்பெறுவோர் உயர்ந்தோராகவே இருத்தல் வேண்டும் என்பது அவர் எதிர்பார்ப்பு.

> வழக்கெனப் படுவது
> உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட்டா
> கலான.
>
> (தொல்காப்பியம் - பொருளதிகாரம். மரபியல். 638)

எனவே உயர்ந்தோராய்க் கருதப்படாது அடியோர், ஏவலர் எனத் தாழ்த்தப்பட்டோர் பற்றிய செய்திகளைப் பழந்தமிழ் இலக்கியங்களிலே பெருமளவு காணல் இயலாது. இவ்வுண்மை அகத்திணைசார் காதல் இலக்கியங்களுக்குப் பெரிதும் பொருந்துவதாகும். மேற்குறித்த அடியோர், ஏவலர் பற்றிய பாடல்கள் வரினும் அவை, 'அன்பின் ஐந்திணை' எனப்படும் காதல்வாழ்வியற் சட்டங்களுள் அடங்காதனவாய்ப் பெருந்திணை, கைக்கிளை என்னும்முறைமைசாராக் காமமாகவே காட்டப்படும். புறத்திணைப் பகுப்பினுள்ளே அடங்குவோரும் தலைமைப்பாடுடைய மன்னராகவோ, குறுநிலமன்னராகவோ, பெருநிலக்கிழாராகவோ, போர்த்தலைவர்களாகவோ விளங்குவதே பெருவழக்கு. கஞ்சிக்குள்ளே காணப்படும் பயறு போலச் சாமானிய மக்கள் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே தலைகாட்டுவதுண்டு இவற்றை ஆய்வாளர் மிக நுணுக்கமாக மழைத்துளியை எதிர்நோக்கிநீர்வீடாயுடன் காத்திருக்கும் சாதகப் பறவைகள் போலக் காத்திருந்து பெறும் நிலையே உள்ளது. ஆக, இக்கட்டுரையிலே காட்டப்படும் சான்றுகள் 'தமிழர்' என்ற சொல்லின் கருத்துப் பரப்பினை 'உயர்ந்தோர்' என்ற அளவிற்குக் குறுக்கி விடுகின்றன குழுநிலைச் சமூக அமைப்பிலிருந்து (Tribal Society) நாகரிக சமூக அமைப்பினை நோக்கி, (Civilized Society) வளரத் தொடங்கியிருந்த ஓர் இனம் பற்றிய செய்திகளை இலக்கியமாக்குகையில் குழு நிலைச் சமூக முறைமைகளும் ஆங்காங்கே தலைகாட்டுகின்றன என்ற முடிவிற்கே பழந்தமிழிலக்கியங்கள் வரவைக்கின்றன. இந்நிலையில் இக்கட்டுரையிலே கூறப்படும் காதலசார் செய்திகளும் அவற்றின் விளைவாக மலரும் மணவாழ்க்கையும் மணப்பெண் பெறும் சீதனமும் தமிழரிலே சிறுபான்மையினரான உயர்ந்தோர் பற்றியனவாகவே அமைவதும் தவிர்க்கவியலாததாகின்றது. (உழைப்பொன்றினையே முதலாகக் கொண்டு அதன் மூலம் தம் வயிற்றுப்பாட்டையும் பிற சிறுதேவைகளையும் நிறைவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டோர், திருமணஞ் சார் ஆடம்பரங்களாலும் சீதன முறையாலும் பாதிக்கப்படும் அளவிற்கு உள்ளாகவில்லை என்றே தோன்றுகின்றது.) இந்த வரையறைகளுக்குள் நின்றே இக்கட்டுரையில் வருவனவற்றை அணுகுவது பொருத்தமாகும்.

## களவு, கற்பு:

பிறர் அறியாதவாறு தலைவன் தன்னுடைய பாங்கன் (நண்பன்) துணையுடனும், தலைவி தன்னுடைய தோழியின் துணைவனுடனும்ஒருவரை ஒருவர்கண்டு உள்ளத்தாலும், உடலாலும் (உள்ளுறுபுணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி) அன்புப் பிணைப்புற்று ஒருவர் இன்றி மற்றவர் இல்லை என்ற அளவிற்கு அன்பை வளர்க்கும் கட்டமே 'களவு' எனப்படும். தலைவன் தலைவியினிடத்தே கொண்ட அன்பை நிறுவும் அடையாளமாக, இலைகுழைகளாலான தழையாடையைப் பரிசிலாய் வழங்குவது வழக்கம் (இது குழுநிலைச் சமூக வாழ்வில் நிலவிய ஒரு வழக்காகலாம்.)

களவு முற்றித் திருமணக் கட்டத்தை அடையும்பொழுது தலைவன் தலைவியரின் நிலையையுணர்ந்து பெற்றோர் இருசாராரும் ஒப்புதல் தந்தால் திருமணம் நிகழும். அந்நிலை ஏற்படாவிட்டால் தோழியின் ஊக்குவிப்புத்துணையுடன் தலைவன் பிறர் அறியாதவாறு தலைவியைக் கூட்டிச் சென்று திருமணம் செய்வதும் உண்டு இதனை 'உடன்போக்கு' என்பர். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் முறையான திருமணங்கள் பெற்றோரின் ஒப்புதலின் அடிப்படையிலேயே நிகழ்ந்திருக்கலாம் இத்திருமணத்திலே பெண் வீட்டார் மணமகனுக்கு மணவினைப் பரிசாக, சீதனமாக எதுவுமே வழங்கியதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் மணமன்றே மணமகளுக்குப் பரிசில் வழங்குவதற்குச் சான்று உண்டு.

> எக்கர் ஞாழல் மலரின்
> மகளிர்
> ஒண்டழை அயருந்துறைவன்
> தண்டழை விலையென
> நல்கினன் நாடே - என்ற ஐங்குறுநூற்றுச் செய்யுளை (147)

எடுத்துக் காட்டாகத் தந்து, மனோன்மணி சண்முகதாஸ் (தமிழர் திருமண நடைமுறைகள் - பழந்தமிழர் திருமண நடைமுறைகள். பக். 39.) கூறும் விளக்கம் இது

"இப்பாடல் பெண்ணின் சுற்றத்தார் கேட்ட பொருளைத் தலைவன் கொடுத்து வரைவு (திருமணம்) மாட்சிப்படுத்தியதையறிந்த தோழி மனமகிழ்வுடன் தலைவிக்கு அச்செய்தியினைக் கூறுவதாக அமைந்துள்ள நெய்தல் நிலப் பிரதேசத்திலே (கடலும் கடல் சார்ந்த நிலமும்) வாழ்ந்தவரிடையேயுள்ள பொருள் மணத்தை விளக்குகின்றது "தண்தழை விலை" என்னும் தொடருக்கு உரையாசிரியர்கள் "முலை விலை" எனப் பொருள் கூறியுள்ளனர். தலைவியின் முலைவிலையாக நாட்டையே தலைவன் வழங்குகின்றான். அதன் பின்னரே அவர்கள் மண உறவு நிலைப்படுத்தப்படுகின்றது"

(ஷ - பக். 39)

மணமகன் மணமகளுக்கு இன்று வழங்கும் 'கூறை' தமிழரின் தழை வழங்கும் வழக்கத்தின் அடையாளமாகக் கொள்ளத் தக்கது மனோன்மணி சண்முகதாஸின் கூற்றிலிருந்து அக்காலத்திலும் காதலமணம், பேசிச் செய்யும் மணம் (பொருள் மணம்) என்று இருவகை மணங்கள் நிலவின என்றே கொள்ளத் தோன்றுகின்றது. ஆனால் இப்பாடலினை மட்டும் கொண்டு அத்தகைய முடிவிற்கு வரல் இயலாது காதல்முற்றிக் கடிமணம் செய்ய வேண்டிய நிலையில் தலைவன் தன் காதலிக்குத் தன் நாட்டையே சீதனமாய் வழங்க முன்வந்திருக்கலாம்.

## சொக்கன்

இவ்விடத்தில் சீதனம்என்ற சொல் குறிக்கும் பொருளும் நோக்கத்தக்கதே.

சீதனம் என்ற சொல் 'இலட்சுமிகரம் பொருந்திய செல்வம்' எனப்பொருள்படும் (சீ. இலக்குமி தனம் - செல்வம்) இதனை ஸ்திரிதனம் என்ற சொல்லின் மரூஉ எனவும் கொள்வதுண்டு இதற்குப் பொருள் பெண்ணுக்கு வழங்கும் செல்வம் என்பது பின்னுள்ள பொருள் கூடிய பொருத்தம் உடையதாகும். இதன்படி மணப்பெண்ணுக்கு மணமகன் வழங்குவதும் ஸ்திரிதனமே. மணமகளின் பெற்றோர் வணங்குவதும் ஸ்திரிதனமே பின்னைய கருத்துப் பிற்காலத்தில் எழுந்திருக்க வேண்டும். இதுபற்றிப் பின்னர் நோக்குவோம் ஆனால் தென்னிந்தியாவில் ஸ்திரிதனம் பெரும்பாலும் 'வரதக்ஷிணை' என்ற பெயராலேயே வழங்குகிறது. வரன் - மணமகன் அவனுக்குப் பெண் வீட்டார் வழங்கும் தக்ஷிணையே - காணிக்கையே ஸ்திரிதனம் குடும்பத்திலே சொத்துரிமை ஆணுக்கே வழிவழி வரும் வழக்கத்தினால் பெண்ணிற்குப் பொருளாதாரப் பாதுகாப்பளிக்க அந்த வரதக்ஷிணைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## திருமணம்

தொடக்ககாலத்திலே திருமணம் எவ்வாறு நடைபெற்றது என்பதற்குப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அகநானூற்றிலிருந்து (86:1-12, 136:1-18) இரு பாடல்களை எடுத்துக்காட்டிக்களாய்த் தந்துள்ளார் ('தமிழர் சால்பு' -- பக் 281, பெண்கள் - பாரிபுத்தகப் பண்ணை (3-ஆம் பதிப்பு - 1985) பாடல்களின் பொருளையடுத்து அதன் சாரங்களை வகையிட்டு செய்து அவர் தந்துள்ளவை பின்வருவன

1. நன்னாளையும் நன்னிமித்தத்தையும் குறிக்கும்திங்களும் சகடமும் சேர்ந்த காலைநேரமே பெரும்பாலும் (திருமணத்துக்குக்) கைக்கொள்ளப்பட்டது (திங்கள், சந்திரன், சகடம் உரோகிணி)

2. பந்தல் அமைத்து அலங்கரித்தல்.

3. முரசம் முழங்குதல்,

4. சுற்றத்தாருக்கும் மற்றவருக்கும் உணவளித்தல்

5. பெண்ணை அலங்கரித்து விதானத்தின் கீழ் (மேல் தட்டி) இருத்தல்.

6. முதுபெண்டிர் மணமகளுக்குக் குடங்களும் கலங்களும், பாத்திரங்களும் அளித்தல்.

7. முருகனை வணங்குதல்

8. புதல்வரைப் பயந்த (பெற்ற) பெண்கள் மணமக்களை வாழ்த்துதல்'

9. இராக்காலத்தில் மணமகளை மணமகனுக்குச் சுற்றத்தார் அளித்தல்.

மேற்குறித்தவற்றுள் நல்ல நாள், நன்னிமித்தம், முருகவழிபாடு என்பன சமயஞ்சார் நிகழ்வுகளாயினும் பிற்காலத்துச் சமயக்கிரியைகளும் சடங்குகளும் இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது. திருமணத்தோடு தொடர்பான புறச் செயற்பாடுகள் இன்றும் அதிகம் மாற்றம் அடையவில்லை. மணமக்களை வாழ்த்துவதில் இக்காலத்திற்போல ஆண்களும் இடம்பெறுதல் அன்று இல்லை. உண்டாட்டின் முதன்மையை நோக்குகையில் எளிமையாக நடைபெறும் (கிரியைகள், சடங்குகள் இடம் பெறாத) திருமணத்தினைச் 'சோறு கொடுத்தல்' என்று வழங்குவதும் நோக்கத்தக்கதே. ('சோறு கொடுத்தல்' என்பது உற்றார் உறவினருக்கு வழங்குவதைக் குறிப்பிடாது மணமகள் மணமகனுக்குச் சோறளிப்பதனையே இன்று குறிக்கிறது) முற்காலத்தில், வாழ்த்துகையில் பூக்கள் சொரியும் வழக்கம் இருந்தது இன்று 'அறுகரிசியிடல்' அதனிடத்தைப் பெற்றுவிட்டது. (தீதறுக என வாழ்த்தி சின்மலர் கொடுதூவி' - மங்கலவாழ்த்துப் பாடல் 62 சிலப்பதிகாரம்) சோதிடநூல் முறைக்கமைப இதுவே நல்லோரை என்று நியமித்து நாளின் எந்தநேரத்திலும் (சாமமாயினும் சரியே) திருமணம் நடைபெறும் வழக்கம் அன்று இருந்ததில்லை.

(மிகுதி அடுத்த மஞ்சரியில்)

மகாதேவா ஜோதிடம்
புதிய கடை திறப்பு விழா
நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆவணித் திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை (27 - 08 - 1993) நண்பகல் 12 04 - 12 28 மணியளவில் கூடும்

மில்க்வைற் உற்பத்தி விலைகள்

| | |
|---|---|
| மில்க்வைற் நீல சோப் கட்டி ஒன்று | ரூபா 7. 00 |
| ,, டசின் ஒன்று | ரூபா 80. 00 |
| ,, 3 டசின் கட்டு | ரூபா 230. 00 |

# தாயகக் கனவு - ஓர் அறிமுகம்

அரசின் பொருளா உண்மையான பின்புலத்தில் ளைக்கமிரா 'பிளாஷ் பாக்' உத்

நிறைவு செய்யப்போவதில்லை என்பதை முதலிலேயே எச்சரிக்கையாகக் குறித்துவிட்டு தமிழிலக்கியங்களினூடாக மேலோட்டமான சில கருத்துக்களை முன்வைக்கின்றேன்.

**"தமிழர்" என்ற சொல்லின் கருத்துப் பரப்பு:**

சங்ககாலம் என்று தமிழிலக்கியத் தோற்றக் காலத்தை

கவோ விளங்குவதே பெரு வழக்கு. கஞ்சிக்குள்ளே காணப்படும் பயறு போலச் சாமானிய மக்கள் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே தலைகாட்டுவதுண்டு இவற்றை ஆய்வாளர் மிக நுணுக்கமாக. மழைத்துளியை எதிர்நோக்கிநீர்விடாயுடன் காத்திருக்கும சாதகப் பறவைகள் போலக் காத்திருந்து பெறும் நிலையே உள்ளது. ஆக, இக்கட்டுரையிலே

புப் பிணைபபுற்று ஒருவர் இன்றி மற்றவர் இல்லை என்ற அளவிற்கு அன்பை வளர்க்கும் கட்டமே 'களவு' எனப்படும். தலைவன் தலைவியினிடத்தே கொண்ட அன்பை நிறுவும் அடையாளமாக, இலைகுழைகளாலான தழையாடையைப் பரிசிலாய் வழங்குவது வழக்கம் (இது குழுநிலைச் சமூக வாழ்வில் நிலவிய ஒரு வழக்காகலாம்.)

மனமகிழ்வுடன் தலைவிக்கு அச்செய்தியினைக் கூறுவதாக அமைந்துள்ள நெய்தல் நிலப் பிரதேசத்திலே (கடலும் கடல் சார்ந்த நிலமும்) வாழ்ந்தவரிடையேயுள்ள பொருள் மணத்தை விளக்குகின்றது "தண்தழை விலை" என்னும் தொடருக்கு உரையாசிரியர்கள் "முலை விலை" எனப் பொருள் கூறியுள்ளனர். தலைவியின் முலைவிலையாக நாட்

படி மணபபெண்ணுக்கு மணமகன் வழங்குவதும ஸ்திரி தனம். மணமகளின் பெற்றோர் வணங்குவதும் ஸ்திரி தனமே பின்னைய கருத்துப் பிற்காலத்தில் எழுநதிருக்க வேண்டும். இதுபற்றிப் பின்னர் நோக்குவோம் ஆனால் தென்னிந்தியாவில் ஸ்திரி தனம் பெரும்பாலும் 'வரத

வருக்கும் உணவளித்தல்

5. பெண்ணை அலங்கரித்து விதானத்தின் கீழ் (பந்தல்) இருத்தல்.

6. முதுபெண்டிர் மணமகளுக்குக் குடங்களும் கலங்களும், பாத்திரங்களும் அளித்தல்.

முறைக்கமைய இதுவே நல்லோரை என்று நியமித்து நாளின் எந்தநேரத்திலும் (சாமமாயினும் சரியே) திருமணம் நடைபெறும் வழக்கம் அன்று இருந்ததில்லை.

(மிகுதி அடுத்த மஞ்சரியில்)

மகாதேவா ஜோதிடம்

**புதிய கடை திறப்பு விழா**

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆவணித் திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை (27 - 08 - 1993) நண்பகல் 12 04 - 12 28 மணியளவில் கூடும் சிவமுகூர்த்தத்தில் மங்களத் திறப்பு விழா நடைபெறும். ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

– அன்பன்,
இ. மகாதேவா

239 மருத்துவமனை வீதி.
(ஆஸ்பத்திரி வீதி),
யாழ்ப்பாணம். (5783)

**நெஞ்சத்தில் நிலைத்திட்ட 1-ம ஆண்டு நினைவஞ்சலி**



மலராய் மலர்ந்தது
04-06-1946

சருகாய் மடிந்தது
27-08-1992

திருமதி
**லூக்காஸ் அந்தோனியாப்பிள்ளை**
**(அழகு)**

எங்கள் அழகுத் தெய்வமே
ஓராண்டு கழிந்ததுவே - உம்மைப்
பிரிந்து தவிக்கின்றோம்
அம்மா என்றழைக்கும் எங்கள்
அபயக்குரல் கேட்கலையோ,

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், மாமி, மைத்துனர்மார்,
மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.
இல. 89/7, சென் செபஸ்ரியன் றோட்,
குருநகர். (5782)

**மில்க்வைற் உற்பத்தி விலைகள்**

| | | |
|---|---|---|
| மில்க்வைற் நீல சோப் கட்டி ஒன்று | ரூபா | 7. 00 |
| ,, டசின் ஒன்று | ரூபா | 80. 00 |
| ,, 3 டசின் கட்டு | ரூபா | 230. 00 |
| மில்க்வைற் துண்டு சோப் ஒன்று | ரூபா | 3. 50 |
| ,, 50 கொண்ட பொதி | ரூபா | 160. 00 |
| சலவைத்துதூள் 50 கிராம் பைக்கெற் | ரூபா | 6 00 |
| ,, 50 கிராம் பக்கெட் டசின் | ரூபா | 65. 00 |
| ,, 450 ,, ,, ஒன்று | ரூபா | 45. 00 |
| ,, 450 கிராம் 2 டசின் கொண்ட பெட்டி | ரூபா | 1000. 00 |

மில்க்வைற் மேலுறைகள், சலவைப் பவுடர் வெற்றுப் பக்கெற்றுகள் 25 தந்து அப்பியாசக் கொப்பி ஒன்று பெறுங்கள்.

உள்ளூர் உற்பத்திகளை உபயோகத்தில் கொள்வோம்.

- மில்க்வைற்

(சி-7287)

**போர்க்காலத்தில் கட்டிடம் கட்டுவதா?**

போர்க்காலத்தில் கட்டிடம் நிர்மாணிக்க உகந்த நேரம் அல்ல என்பது பலரின் கருத்து.
ஆனால், கட்டிடம் அமைப்பதற்கான வடிவமைப்பும, வரைபடங்களும் தயார்படுத்துவதற்கும்

**இதுதான் உகந்த நேரம்**
**என்பது எங்கள் கருத்து.**

ஏனெனில், நாட்டு நிலைமை சீராகும் பொழுது, உங்கள் கையில் ஒரு திட்டப்படம் தயாராக இருந்தால், உடனடியாக நிர்மாண வேலையைத் தொடங்கலாம். உங்கள் வீடுகள், கடைகள் மற்றும் கட்டிடங்கள் வடிவமைக்கும் பொழுது ஒரு அனுபவம் பெற்ற கட்டிடக்கலை நிறுவனத்தை நாடி உங்கள் பணத்திற்கு பெறுமதியான, சிறந்த திட்டப்படத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

**சிந்தியுங்கள்!**

தகவல:

**செந்தில்குமரன் கட்டிடக்கலைஞர்**
(பட்டயம் பெற்ற கட்டிடக்கலைஞர்)

"சரஸ்வதி வாசம்", அரசடி ஒழுங்கை,
தாவடி.

(5766)

# தாயகக் கனவு - ஓர் அறிமுகம்

அரசின் பொருளாதார நிபந்தனைகளின் கீழ் வீடியோப் படப்பிடிப்புக்குத் தேவையான அடிப்படைப் பொருள்கள் தடைப்பட்டுப் போன நிலையில் தாயகக் கனவு சமீபத்தில் வெளிவந்துள்ளது. அந்தப் படத்தின் கலை டைப் பார்க்க வாய்ப்புக் கிடைத்தது முதலில் ஒன்றின் பின் ஒன்றாக நடிகர்களின் பெயர்களை அடையாளம் காட்டும் வழமையான செயற்பாடுகளுடன் படம் ஆரம்பமாகிறது. மொத்தத்தில் அரை மணிநேரம் ஓடும் வர்ணப் படமிது. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட இந்தபடத்தில் இன்றைய போராட்டத்தின் பல நிகழ்ச்சிகளின் ஒரு சிறு பகுதி மாத்திரம் தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. இங்கு தாயகக் கனவை விமர்சனம் செய்வதல்ல நோக்கம் அறிமுகம் செய்வதே. விமர்சனம், சர்ச்சை, மதிப்பீடு ஆகியவற்றிற்கு அப்பால் சென்றுபார்த்தால் மனிதனின் அடிப்படைக் குணங்கள், இராணுவ அனர்த்தங்கள், போராளிகளின் வீரம், மனோதிடம் ஆகியவற்றின் சுவடு இந்தப் படத்தில் பதிந்திருக்கிறது.

படத்தில் வரும் பல சம்பவங்கள் தாயகக் கனவு என்ற தலைப்பிலிருந்து பிறந்ததே. படம் முழுவதும் இதே அர்த்தத்தில் தான் மையக் கருவின் தொனிகள் வெளிப் படுகின்றன. கதை சிக்கலில்லாத நேர்கோட்டில் அமைந்திருக்கிறது. நாம் நேரிடையாக அனுபவித்து வரும் சமகால நிகழ்வுகளைப் படம் வெளிக்கொணர்வதால் அவை பார்வையாளர்களுக்குக் 'கதை' யாகத் தெரியவில்லை. இந்தப் படத்தை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தாயகக் கனவு விளக்கப் படத்தின் மையக் கதை அப்பழுக்கற்ற உண்மையான பின்புலத்தில் நடைபெறுகின்றது.

படத்தின் இசை ரசிகர்களுக்கு குறுக்கே படத்தைப் பார்க்க விடாமல் நந்தியாக இருக்கவில்லை. சத்தம் அதிகமாக உதறவில்லை. இசை எளிமையாக உள்ளது. பாடல்கள் Crooning என்ற மெல்லிய குரலுக்கு அண்மையான ஒரு மெல்லிய இடைநிலைக் குரலில் பாடப்பட்டுள்ளன.

ஓர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்வது பற்றியும், அவரின் தாய்-தந்தையர் மீதும், போராளி கரும் புலியாகி வீரச்சாவைத் தழுவிக் கொள்வதன் மீதும் புனையப்பட்ட படம் தாயகக்கனவு. படத்தில் வரும் மாந்தர் மற்

**மதன்**

றும் போராளிகளின் நடத்தையும் போக்கும் கற்பனை அதிகம் கலக்காமலேயே காட்டப்படுகின்றன. வாடிக்கைப் பாத்திரங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. தொழில் துறைசார் நடிகர்களில்லாமல் சாதாரண நடிகர்களுடன் படம் நகர்கிறது. படத்தின் ஒட்டு மொத்தத்தன்மை ஒரு விவரணமாகவே அமைந்துள்ளது. முழுப்படமும் (வெளிப்புறக் காட்சிகள்) ஒரு தளத்தில் எடுக்கப்பட்டது போல் தெரிகிறது.

ஓர் எழுத்தாளனின் திறமை 'எழுதிச் செல்லும் விதி'யின் கையில் தங்கியருப்பது போல ஒருவீடியோப்பட இயக்குநரின் திறமை அவர் கமிராவை இயக்குவதில் தங்கியுள்ளது கமிரா எங்கு வேண்டுமானாலும சஞ்சரிக்கலாம். இந்தப் படத்தில் கிட்டத்தட்ட படத்தின் கால்வாசி- முக்கியமான சம்பவங்களைக்கமிரா 'பிளாஷ் பாக்' உத்தியிலேயே படம்பிடித்துள்ளது. சில ஆங்கிலச்சினிமாப் படங்களில் வட்ட வடிவமைப்பைக் (Circular Form) கொண்டு முடிவது போல, ஆரம்பத்தில் பிறந்த தினத்தைக்காட்டி பிறந்த தினத்தன்றே (சகோதரியின்) பிரதான பாத்திரம் வீரச்சாவைத் தழுவிக் கொள்வது போல் காட்சிப் படிமங்கள் அமைந்துள்ளன. தமிழ் சினிமாப்படங்கள் போல் மோதல்களோ கதாநாயகர்கள் வில்லன் சண்டையைக்காட்டி இயக்குநர் கைவிரல்களில் நெருப்பைச் சுட்டுக்கொள்ளவில்லை.

துணைப் பாத்திரங்களைத் தவிர்த்து, நான்கு மையபபாத்திரங்களை விரல் விட்டு எண்ணி விடலாம் இந்தப் பிரதான பாத்திரங்களின் மெய்ப்பாடுகள் மற்றும் ஊடாட்டங்கள் மூலம் கதையமசம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

வீடியோக் கலாசாரம் பற்றிப் பலர் இப்போது ஆதங்கம் தெரிவித்துக்கொள்கிறார்கள். தாக்கத்தைக் கொடுக்கும் சினிமாப்படத்தின் சிருங்கார வடிவமும், வியாபார வீடியோப்பட கூறுகளும் முதலாளியத் தன்மையும் தாயகக் கனவில் இல்லை. அன்றாடம் அர்த்தமற்ற கேளிக்கைகளின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் சிலரை இது எவ்விதம் பாதிக்கும்?

படத்தில் என்னை மிகவும் பாதித்த விஷயத்தை நினைவு கூர விரும்புகிறேன். போராளி தற்கொலைத் தாக்குதலுக்குக் கிளம்பும்போது கூட, "போயிறறு வா. கவனம்', என்று அணியின் தலைவன் கூறுவதைப் பொதுமைப்படுத்தினால் அந்த வாசகத்தில் ஒரு நம்பிக்கைக் கோட்பாடு Opt-mism) வலியுறுத்தப்படுகிறது. இதனை ஓர் விமர்சனப்பார்

( 5ஆம் பக்கம் பார்க்க)

# WANTED

Applications are invited from Teachers of English on full time or part - time basis for a chool with well-discinlined eager students between the ages of ten and sixteen.

The following categories of teachers may apply:

1 Graduates
2 Trained Teachers
3 A/l with English **HNDE, O/L with Distinction in English.**

Those selected from category '3' will be given periodical training and guidance.

Please apply with Bio-data:

Ad. No 199,
C/o Eelanaa ham,
Mahendra Veethy,
Jaffna.

(சி-7282)


## 3 ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு :
27-3-1971

வீரச்சாவு :
27 8 1990

வடமராட்சி கிழக்கு, வேம்படி உடுத்துறையைச் சேர்ந்த

**2-ம் லெப்டினன்ட் எலிசபெத்**

(ஸ்ரீஸ்கந்தராசா – ஸ்ரீரஞ்சனி)

ஒரே தினத்தில் வீரச்சாவடைந்த
மேஜர் செல்வராசா மாஸ்டர் (அன்பு)
அவர்கட்கும் ஏனைய மாவீரர்களுக்கும்
எமது நினைவஞ்சலிகள்

நீங்கள் பாடையில போனவர்கள் அல்ல
விடுதலைப் பாதையின் நெருப்பாற்றை கடக்க
பாலமானவர்கள்
பூமியிலே புதைக்கப்பட்டவர்களல்ல
புயலாயோடிப் போன இனவெறியை ஒடுக்க
புறப்பட்ட புரட்சிவாதிகள்
கல்லறையில் அடைக்கப்பட்டவர்கள் அல்ல
களமாடி நிலம் காத்த காவிய நாயகர்கள்.

வடமராட்சி கிழக்கு,
வேம்படி.

குடும்பத்தினர்,
(5749)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## 3-ம் ஆண்டு நினைவு நாள்



மேஜர்

**செல்வராஜா மாஸ்ரர்** (அன்பு)

[சின்னத்துரை செல்வராஜா]

பிறப்பு
01. 09. 1961

வீரச்சாவு
27 08 1990

அன்பு!
இழப்புக்கள் எமக்கு புதியவை அல்ல
இழப்புக்களால் நாங்கள் என்றும்
இடிந்து போனவர்களும் அல்ல.
மாறாத
உறுதி பெறுபவர்கள்
வீரர்கள் பலரை உருவாக்கி விட்டு
விழிதனை மூடிய மாவீரனே!
நிம்மதியாய் நீ உறங்கு
தேசம் விடியும்.
எங்களின் தலைவன்
ஏந்திய புலிக்கொடி வானுயரும்.

27 08. 90 அன்று பலாலியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட வீரவேங்கை எலிசபெத்திற்கும் எமது அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

- குடும்பத்தினர்.
(சி-7279)

## ஓராண்டு நினைவஞ்சலி



# 'ராய்டர்' பற்றிய குறிப்பு:

இன்று உலகின் எந்த மூலையில் எந்த முக்கிய நிகழ்ச்சி நடந்தாலும் அது உலகில் உள்ள எல்லா நாளிதழ்களிலும் வந்து விடுகிறது. மிகக்குறைந்த நேரத்தில் செய்திகள் அனைவரையும் அடைந்து விடுகின்றன. இதற்குக்காரணமாய் இருந்தவர் ஜூலியஸ்ராய்டர்.

ஜூலியஸ் ராய்டர் 1816-ம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் கேசல் நாட்டில் பிறந்தார். அவர், 13ஆம் வயதிலேயே தன் மாமாவின் வங்கியில் கிளார்க் ஆக வேலை பார்த்தார்.

பின் கார்ல் காஸ் என்றவிஞ்ஞானியிடம் சீடர்ஆனார் ராய்டர். ஆர்கிமிடிஸ், நியூட்டன் போன்ற உலகப்புகழ் பெற்ற பெரிய விஞ்ஞானிகளுக்கு இணையானவர் காஸ். கணித மேதை.

அப்போது 'டெலிகிராபி' எனப்படும் தந்திதகவல் தொடர்பு குறித்த ஆராய்ச்சிகளை நடத்திக்கொண்டிருந்தார் காஸ் இந்த ஆராய்ச்சிகளில் அவருக்கு உதவிய ராய்டர் விரைவாகத் தகவல்களைப் பல இடங்களுக்கு எப்படி அனுப்புவது என்பதை அனுபவ பூர்வமாக அறிந்தார். இந்த ஆராய்ச்சிகளால் தகவல் சேகரிப்பது, அனுப்புவது ஆகியவற்றில் ராய்டருக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது.

பின் 1849ஆம் ஆண்டு தகவல் சேகரிப்பது ,அனுப்புவது ஆகியவற்றைத் தொழிலாகக் கொண்டார். அவரது இந்த முயற்சிதான் பின்னால் 'ராய்டர்' என்ற உலகப்புகழ்பெற்ற செய்தி நிறுவனம் (நியூஸ் ஏஜென்சி) உருவாகக் காரணமானது.

ஜெர்மனியில் ஒருமுறை தந்தி அனுப்பும் கபபிகள் (கேபிள்) அறுபட்டுத் தகவல்கள் வந்து சேருவதில் தாமதம் ஏற்பட்டது. பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் அதேநிலைதான். அதனால் புறாக்கள் மூலமும் தனிநடர் மூலமும் செய்திகளை அனுப்பினார் ராய்டர். இந்த முறையில் அவர் பெரும் வெற்றி கண்டார்.

அதன் பிறகு ராய்டர் ஏஜென்சி' துவக்கப்பட்டது. பிரானசில், பாரிஸ் நகரில் இருந்து இயக்க முடிவு செய்தார் ராய்டர். ஆனால் அதற்கு மிகுந்த எதிர்ப்புகள் வந்தன பிரான்சு அரசு நிபந்தனைகள் விதித்தன அதனால் தனது 35 ஆம் வயதில் இங்கிலாந்திற்கு சென்று அந்த நாட்டுக் குடியுரிமை வாங்கி தனது செய்தி நிறுவனத்தை ஆரம்பித்தார். அங்கு அவரால் சுதந்திரமாக இயங்க முடிந்தது. பிரான்ஸ் நாட்டிலுள்ள 'கலே' என்ற நகருக்கும், இங்கிலாந்தில் 'டென்வர்' துறைமுகத்திற்கு மிடையே கடலுக்கு அடியில் தந்தித் தொடர்பு (சப்மரீன் கேபிள்) ஏற்பட்டது அதனால் ஐரோப்பாவிலிருந்து உடனுக்குடன் தகவல்கள ராய்டருக்குக் கிடைத்தன.

முதலில் வியாபார சம்பந்தமான தகவல்களை அனுப்புவதிலும் சேகரிப்பதிலும ஈடுபட்டார். ஐரோப்பா முழுவதிலும் இதறகாகப் பல பிரதிநிதிகளை நியமித்தார்.

இங்கிலாந்தில் உள்ள பத்திரிகை அதிபர்களைப் பல முறை சந்தித்துத் தனது திட்டத்தைப் பற்றிக் கூறினார். அவர்கள் ராய்டரின் சேவையை ஏற்றுக்கொள்ள ஏழாண்டுகள் அவர் போராட வேண்டியிருந்தது இறுதியாக 1858-ம் ஆண்டு 'டைம்ஸ்' நாளிதழ் ராய்டர் நிறுவனச் செய்தியை வெளியிட்டது. பிரான்ஸ் நாட்டில் மூன்றாம் நெப்போலியன் மன்னரின் பேச்சைச்செய்தியாக்கி அனுப்பியிருந்தார் ,ராய்டர் நிறுவனததின் பாரிஸ் பிரதிநிதி.

அதுதான் ராய்டர் செய்தி நிறுவனம் பத்திரிகைக்கு அளித்த முதல் செய்தித் தொகுப்பு. அதன் பின்னர் அடுத்தடுத்து உற்சாகமாகச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டனர் நிறுவனப் பிரதிநிதிகள். பல நாடுகளில் முக்கிய ஊர்களில் செய்திகள் சேகரிக்கப் பல நிருபர்களை நியமித்தார் ராய்டர். இங்கிலாநதிற்கும் அயர்லாந்திற்குமிடையேதந்தி கேபிள்களை ஏற்படுத்தினார்.

அதன் மூலம்அமெரிக்க உள்நாட்டுப் போரில் பாதிக்கப் பட்டமக்கள் தப்பிபடகுகளில் இங்கிலாந்தை நோக்கி வந்து கொண்டிருப்பதை முன் கூட்டியேறிஅந்து சொன்னார் ராய்டர்.

ஜெர்மனியின் ஒரு பகுதியான ஹனோவர்' நகருக்கு வடக்குக் கடலின் ஊடாக 'கேபிள்' அமைத்துக்கொள்ள அவர் ராய்டருக்கு அனுமதி அளித்தார். அதன் பின்னர் ஆங்கிலேயர், அமெரிக்க அரசுகளின் உதவியுடன் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் இடையே கேபிள் இணைபபை ஆங்கில - அமெரிக்க தந்திக் கமபனியும், ராய்டர் நிறுவனமும் பயன்படுத்தின.

மிகக் குறுகிய காலத்தில் மிகப் பெரிய திறமை வாய்ந்த செய்தி நிறுவனத்தை உருவாக்கிய பெருமை ராய்டருக்கு உண்டு. இன்றும் ராய்டர் நிறுவனச் செய்திகளுக்குப் பததிரிகை உலகில் மதிப்பும் மரியாதையும் உண்டு.


யாழ் நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

# 'Wild Geese'

**'வைல்ட் கீஸ்'**

[தமிழ் விளக்கம்]

**சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்**

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)


உ

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை



இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார்

இதே தினத்தில் வீரச்சாவடைந்த
மேஜர் செல்வராசா மாஸ்டர் (அன்பு)
அவர்கட்கும் ஏனைய மாவீரர்களுக்கும்
எமது நினைவஞ்சலிகள்

நீங்கள் பாடையில போனவர்கள் அல்ல
விடுதலைப் பாதையின் நெருப்பாற்றை கடக்க
பாலமானவர்கள்

பூமியிலே புதைக்கப்பட்டவர்களல்ல
புரையோடிப் போன இன வெறியை ஒடுக்க
புறப்பட்ட புரட்சிவாதிகள்

கல்லறையில் அடைக்கப்பட்டவர்கள் அல்ல
களமாடி நிலம் காத்த காவிய நாயகர்கள்.

குடும்பத்தினர்,
வடமராட்சி கிழக்கு,
வேம்படி.
(5749)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் வன்னியன் (கிங்ஸ்லி)**

(கணபதிப்பிள்ளை கணநாதன்)

பிறப்பு: 01-04-1971 வீரச்சாவு: 27-08 1992

பல நாள் பசித்திருந்து பலனுக்காய் விழித்திருந்து
பாதகன் மண்ணில தமிழ் மண்ணுக்காய்
மீளாத்துயில் கொண்டவன் வன்னி மண் ஈன்றெடுத்த
வன்னியா!

மாறாது எம் பாசம் மறையாது எம் நேசம்
வெல்லுகின்ற தமிழீழம்எமமன வெந்தணலைநீறாக்கும்
உன் கனவுகள் விரைவில் பலிக்கும்
உன விடுதலை வேட்கை வெல்லும்.

உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, சகோதரர்கள்

இல. 606,
கொக்குவில் வீதி,
துணுக்காய்.
(5779)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் பார்த்தீபன்**

**சிவசுப்பிரமணியம் சிவரூபன்**

(யோகபுரம் மல்லாவி)

தாயின் மடியில்: 30 10-71 தாயக மண்ணில்: 27 08 92

வடமராட்சி தந்த செல்வன்
வன்னி மண்ணில் உரமாகி
தமிழீழ மண்ணை மீட்க
தன் உயிரைத் துச்சமாக்கி
மாதகலில் களம் புகுந்த
மறவேங்கை பார்த்தீபனே
மாதம் பன்னிரண்டு - ஓடி
மறைந்ததையா நீ . சென்று
மண்ணுலகில் உன்உடல் காணோம்
விண்ணுலகில் தானும் காண்பமோ
கண்ணிலே உன்னைக் காணாமல்
கலங்குதையோ எம் உள்ளம்
விண்ணிலே பாதையில்லை - என்றும்
உன்வழி தொடர்வோம் இது உறுதி.

அன்று இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

222, சிவசொரூபன் வீதி,
பாரதிநகர்,
யோகபுரம்.
(7281)

அப்பா, அம்மா,
உடன்பிறப்புக்கள்.

---

ஏற்பட்டது. பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் இதேநிலைதான். அதனால் புறாக்கள் மூலமும் தனிநபர் மூலமும் செய்திகளை அனுப்பினார் ராய்டர். இந்த முறையில் அவர் பெரும் வெற்றி கண்டார்.

அதன் பிறகு ராய்டர் ஏஜென்சி' துவக்கப்பட்டது. பிரானசில், பாரிஸ் நகரில் இருந்து இயக்க முடிவு செய்தார் ராய்

---


'லெவலட் கஸ'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில
காலை 10.80 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)


---

உ

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை



இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார்
ஆலயப் பிரதம கும்பாபிஷேக குரு
பிரம்மஸ்ரீ. வே. சிவஞானக்குருக்கள்
அவர்கள், சிவபதமடைந்த

## ஓராண்டு பூர்த்தி ஆத்மசாந்தி

## அஞ்சலி

நல்லிணுவைப் பரராஜ சேகரனாம்
நற்றுருபன் விநாயகனின் பாக பூஜை
வல்லகும்பா பிஷேகங்கள் அபிஷேகங்கள்
வளமார்ந்த தேவதாவாஹனங்கள்
வல்லபை மணாளனுக்குப் பக்தியோடு
வாரணனின் அருள் வேண்டிப் பூஜை செய்த
நல்லவுள்ளம் கொண்டசிவ ஞான குரு
நாதனடி சேர்ந்திட்ட முதலாண் டின்றே!

மங்களஞ்சேர் கல்யாண வைபவங்கள்
மன்னிடுபூர் வாபரக் கிரியா பாதம்
பொங்கிடும் சைவநெறி ஆகமத்தின்
புகன்றாங்கு கிரியைபல செய்த அண்ணல்
எங்கணுமே புதியமனை குடிபுகுதல்
எழிலான மங்களஞ்சேர் சுபகருமம்
தங்கிடவே செய்துதந்த அந்தணாளன்
தயாளகுண சிவஞானக் குருக்கள் தானே

தொட்டதெல்லாம் பொன்னாகும் கரத்தின் ராசி
தூக்குகரம் சொரிந்திடுமே அருளின் ஆசி
அட்டதிக்கும் போற்றிடுமே அன்னார் பக்தி
ஆனைமுகன் விநாயகனை நெஞ்சிருத்தி
இட்டசித்தி அத்தனையும் பெற்ற அண்ணல்
இனித்திடு புன்சிரிப்பும் கொண்ட செம்மல்
சிட்டபெரும் அந்தணரின் சிரேஷ்ட னான
சிவஞானக் குருஆத்மா பெறுக சாந்தி.

"ஓம் ஸாந்தி"
"ஓம் ஸாந்தி" "ஓம் ஸாந்தி".

இணுவில்
27-8-93

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(5775)

ஆக்கம்:
"கவிமாமணி"

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# " குர்திசு மக்களுக்கு உலகில் நண்பர்களே கிடையாது "

சில காலமாக அமைதியாக இருந்த ஐரோப்பிய தலைநகரங்கள் கடந்த மே மாத இறுதி வாக்கில் கலவரமயமாகின. செருமானிய நகரமான மியுனிச்சில் உள்ள துருக்கிய தூதகரத்தினுள் அடுதியாகப் புகுந்த குர்திசுமக்கள் சிலர் அங்கிருந்த 23 பேரை மடக்கிப் பிடித்து பணயக்கைதிகள் ஆக்கினர். 90 நிமிடங்கள் கழித்து மார்செயில்ஸ் நகரத்தில் இவ்வாறான இன்னொரு சம்பவத்தில் பத்துப் பேர் பணயக் கைதிகளாகினர். மே மாத இறுதி வாரம் முழுவதும் இவ்வாறாக செருமானி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, சுவீடன், பிரித்தானியா, டென்மார்க் எனப் பல நாடுகளில் துருக்கிய இலக்குகள் பல தாக்கப்பட்டன. மொத்தம் 24 நகரங்களில் துருக்கிய தூதரகங்கள், வங்கிகள், விமான அலுவலகங்கள், எனப் பல தாக்கப்பட்டன, இத் தாக்குதல்களைமேற்கொண்டவர்கள் PKK என அழைக்கப்படும் குர்திசு தொழிலாளர் கட்சி என்கிற குர்திசு போராளி அணியினர் ஆவார். கடந்த ஒன்பது வருடங்களாக துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் குர்திசு தாயகத்திற்காக போராடி வரும் இவர்கள் தமது மக்களின் போராட்டத்தினை மேற்குலகம் மறந்துவிடக் கூடாது என்பதற்காக இவற்றினை மேற் கொண்டதாக தெரிகின்றது. இதற்கு முன்னர் மே மாதம் 24-ம் திகதி இவர்கள் 34 துருக்கிய இராணுவப் பயிற்சியாளர்களைக் கொன்றனர். இத் தாக்குதல் அப்போதுதான் துருக்கியின்முதல் பெண் தலைமை அமைச்சராக பதவியேற்ற தான் சு சில்லரை (Tansu Ciller) சிக்கலுக்குள் தள்ளிவிட்டது. திடீரென பி. கே. கே. வன்முறைகளை அதிகரித்தது, அரசியல் அவதானிகளை வியப்பில் ஆழ்த்தியது. ஏனென்றால் கடந்த மார்ச் மாதம் தான் பி. கே கே ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த மொன்றை அறிவித்திருந்தது அது இப்போது முடிவுக்கு வந்து விட்டது.

ஆகவே மீண்டும் மோதல்கள். ஆனால் இப்போது பி. கே. கே பெரும் நெருக்கடிக்குள் உள்ளது. ஏனென்றால் இவர்கள் இவ்வளவு காலமும் தமது புகலிடமாக துருக்கியின் எல்லையில் இருந்த ஈராக்கிய குர்திசு இனத்தவர் கிராமங்களை பயன்படுத்தினர். இவ்

இருந்து துருக்கிய குர்திசு போராளிகளை அப்புறப்படுத்தி விடுவதாக ஈராக்கிய குர்திசு மக்கள் ஒப்புக் கொண்டுவிட்டனர். இதனால் பி. கே. கே. போராளிகள் தமது செயல் பாடுகளை மட்டுப்படுத்த வேண்டியேற்பட்டது மட்டுமின்றி இரு குர்திசு இனத்தவரிடையே மோதல்களும் ஏற்பட்டு பலர் பலியாகியும் விட்டனர்.

ஈராக்கிய குர்திசு தலைவர்கள் ஏன் இவ்வாறு நடந்தனர் எனப்பலரும் வினவுவர். இம் மக்கள் நிலையோ இன்று மிகப் பரிதாபகரமானது. சதாம் உசைன் கட்டவிழ்த்துவிட்ட பாரிய கொடுமைகட்கு உள்ளான இவர்கட்கு வளைகுடாப் போரின்போது அதன் விளைவாக பாதுகாப்பு வலயமொன்று வட ஈராக்கில் நேச அணியினரால் உருவாக்கப்பட்டது. இவ் வலயத்தினுள் இவர்களை பாதுகாக்கும பொறுப்பை துருக்கியும் ஏற்றுள்ளது. அது மட்டுமன்றி இன்று குளிரில் வாடி-போதிய உணவின்மையால் அயருற்றிருக்கும் இம்மக்கள் மீது பி. கே. கே. போராளிகளுக்கு புகலிடம் கொடுத்ததற்காக துருக்கிய விமானங்கள் குண்டு வீசியும் இருநாட்டு எல்லையிலுள்ள இவர்கள் கிராமங்களுக்குபடையெடுத்தது பெரும் தண்டனை வழங்கவே இவர்கள் பி.கே.கே போராளிகளை தமது எதிரிகளாக கருத முற்பட்டுள்ளனர். இது குர்திசு சிக்கலின் ஒரு பரிமாணம். எளிதில் விளங்க முடியாத குர்திசு மக்களின் சிக்கல்களுக்கு அவர்கள் வரலாறே காரணமாக அமைந்துவிட்ட கொடுமை இது.

குர்திசு மக்கள் வரலாறு காட்டும் உண்மை. குர்திசு மக்களின் தொன்மை வாய்ந்த முதுமொழியொன்றின்ஊடாக வெளிவருகின்றது. "குர்திசு மக்களுக்கு உலகில் நண்பர்கள் கிடையாது" என்பதே அது. அது முற்றிலும் உண்மையே. ஏனெனில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் செழிப்பான பண்டையநாகரிகத்தின் தொட்டிலான மெசப்பொத்தேமியாவின் வட கிழக்கில் வாழ்ந்த இவர்கள் உலகின் மிகப் பழைய இனக்குழுவாகும் நீர்வளத்தாலும்-எண்ணெய் வளத்தாலும் குறைவில்லாத பூமி இவர்களது. அதே இவர்களது முதலாவது எதிரியாயிற்று அத

டது. இன்று இரண்டரைக் கோடி குர்திசு மக்கள் (25 மில்லியன்) மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பா வரை அமெரிக்கா, அவுஸ்திரேலியா என எங்கும் பரவி சிதறி வாழ்வதற்கு முதலாம் உலகப் போரின் பின் இம் மக்கட்கு விளைவிக்கப்பட்ட துரோகமே காரணமாகும். ஏகாதிபத்தியவாதிகளாக இருந்த பிரித்தானியாவும் பிரான்சும் இம் மக்கட்கு அமெரிக்க சனாதிபதி வுட்றோ வில்சன் சமர்ப்பித்த புகழ் பெற்ற பதின் நான்கு அம்ச அமைதித் திட்டத்தில் குர்திசு மக்கட்கு தன்னாட்சி என்பது ஒரு அம்சம். ஆனால் இன்று வரை இது நிறைவேற்றப் படவே இல்லை இவர்கள் தாயகம் பலராலும் பங்கிடப் பட்டதேயன்றி வேறில்லை.

இன்று சுதந்திர குர்திஸ்தான் (Free Kurdistan) முழுமையான குர்திசு மக்கள் வாழும்பகுதிகளை நாம் காண விரும்பினால் ஈராக், துருக்கி ஈரான், சிரியா எனப் பல நாடுகளுக்கு நாம் செல்ல வேண்டியிருக்கும். இரண்டரைக்கோடி குர்திசு மக்களில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் ஒரு கோடி மக்கள் துருக்கியில் வாழ்கிறார்கள் 40—50 இலட்சம் குர்திசு மக்கள் ஈரானிலும், முப்பது இலட்சம் பேர் ஈராக்கிலும் வாழ்கிறார்கள். சிரியாவில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களின் நிலைமைஎவ்வாறு இருக்கிறது? குர்திசு மக்களின் தனித்தன்மையே இன்று அவர்களை எதிரிகளாகப் பார்க்கும் நிலையை இரு நாடுகளில் உருவாக்கி இருக்கிறது. பெரும்பான்மை குர்திசு மக்கள் சுனிப்பிரிவு முசுலிம்கள் ஆவார்.

ஆனால் இவர்கள் அராபியரோ அல்லது பேர்சியரோ, அல்லது துருக்கியரோ அல்லர் இவர்கள் மொழியும் பல்வாறாக பிரிந்து இருந்தாலும் அம் மொழி அரபு-பாரசீகம்-துருக்கியச் சாயல் கொண்டது அல்ல. அதேசமயம் இன்றைய உலகில் மும்பெரும் தேசியவாத அலைக்குள்ளும் இம் மக்கள் சிக்கவேண்டி ஏற்பட்டு விட்டது துருக்கி - அராபிய-பேர்சிய தேசிய வாத அலைக்குள் இவர்கள் சிக்கி மூழ்கடிக்கப்படக்கூடிய சிறு தேசிய

**பாலகுமாரன்**

பகுதியில் சதாமின் கொடுமை-வடக்கிலோ துருக்கியர் கொடுமை-கிழக்கிலோ ஈரானியக் கொடுமை-மேற்கிலோ சிறிய மேலாதிக்கம்-லெபனானிலோ முகம் தெரியாத உழைப்பாளிகளாக வாழும் நிலை இவர்களது. ஏன் இந்த இழிநிலை? என்ன காரணம்? ஏற்கெனவே அரசு அமைத்து பிராந்திய வல்லாண்மை நாடுகளாக மாறிபோரின் வழியில் இம் மக்கள் குறிக்கிடுவதாக-தமது இலக்குகளை அடைய தடைக்கல்லாக குர்திசு மக்களை இந்த நாடுகள் கருதுகின்றன சதாமைப் பொறுத்த வரையிலோ தனது பரந்த பாபிலோனியா என்கிற அரபுக்களின் எழுச்சியை குறிக்கும் தனது இலக்கை அடைய தடைக்கல்லாக குர்திசு மக்களைக் கருதுகின்றார். துருக்கியைப் பொறுத்தவரையிலோ குர்திசு பகுதிகளை துருக்கியோடு இணைத்து குர்திசு மக்களை துருக்கியராக உள்வாங்கி அவர்களை நவீனமயப்படுத்தி மேற்தலைத் திருப்திப்படுத்தும்செயலுக்குத்தடையாக இருப்பதாக இவர்களைக்கருதுகிறது ஈரானைப் பொறுத்த வரையில் சியாப் பிரிவு இஸ்லாமிய குடியரசை அமைக்க சுனி குர்திசு மக்கள் பெரும் தடையெனக் கருதுகின்றது. சிரியாவோ தன்னை ஒரு இராணுவ வல்லாண்மையுள்ள நாடாகக தடையாக இருக்கும் சிறுபான்மை மக்கள் குழுக்களை வெறுக்கிறது. எனவேதான் குர்திசு மக்கள் கூறுகிறார்கள் 'எமக்கு நண்பர் எவரும் இவ்வுலகில் இல்லை'' என்று

எனவே இத்தகைய இக்கட்டான நிலையில் வாழும் இம் மக்கள் துருக்கியில் மட்டுமே. தமது விடிவிற்காக ஒரு தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். ஈரானில்முன்னர் போராடிய இம்மக்கள் தமக்கெனஒரு குடியரசை உருவாக்கினர். ஆனால் அது ஒரு வருடம்கூட நீடிக்கவில்லை. ஈரான் ஈராக் போரின்போது இரு நாட்டு குர்திசு இனத்தவரும் ஒவ்வொருக் கொருவர் மோதும் பகடைக்காய்களாக மாற்றப் பட்டனர். குர்திசு மக்கள்மேல் பெரும் கொடுமை புரிந்தவரில் முதலிடத்தை சதாம் உசையின் பெறுகிறார். 1970 அம்

திசு மக்களின் வாழ்விடங்களை அழித்து அவர்களை அப்புறப் படுத்தினர். 2000 முதல்4000 வரையிலான கிராமங்கள் இன்று வெறும் மண்மேடுகளாக - கற்குவியல்களாக உள்ளன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொலையுண்டனர். இவற்றைவிட நச்சு வாயுக்களான சயனைட் மற்றும் மஸ்டர்ட் வாயுக்கள்இம் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டது. இச் சொல்லொணாக் கொடுமைகளைப் புரிந்தவர் சதாம் எனவேதான் வளைகுடாப்போரின்

1991-ம் ஆண்டளவில் வட ஈராக்கில் இம் மக்கட்கென பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டது. தமது மனிதாபிமானத்தை வெளிக்காட்டவும் சதாமிற்கு அழுத்தம் கொடுக்கவும் பயன்பட்ட இந்த நடவடிக்கை தமக்கு விடிவுதேடித் தரும் என்று எதிர்பார்த்த குர்திசு மக்கள் வழக்கம் போல இம் முறையும் ஏமாற்றப் பட்டு விட்டனர்.

தொடக்கத்தில் சுதந்திர நிழல் அரசு ஒன்றையே இவ் வலயத்தில் குர்திசு மக்கள் நடாத்தினர். வரி சேகரித்தனர் நிதி வழங்கினர். ஏன் பொதுத் தேர்தல் ஒன்றைக் கூட நடத்தினர். ஆனால் இம் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. இம்மக்களின் தலைமைக்கிடையே முரண்பாடு ஜலால் தலபானி (Jalal Talabani) என்பவருக்கும் முஸ்தாபா பசானி என்பவருக்கும் இடையே ஏற்பட்டது. இரு தலைவர்களும் ஒத்த கருத்து உடையவர்கள் அல்ல. பசானியோ மேற்குலக அழுத்தத்தைப் பயன்படுத்தி சதாமோடு உடன்பாடு காண விரும்பி பேச்சுக்கள் நடாத்தியவர். அதே சமயம் ஈராக்கை துண்டாட மேற்குலகின் விசுவாசிகளான அரபு நாடுகள் விரும்பவில்லை. எனவே மீண்டும் சதாமோ இம்மக்களைமுடிந்த வரை தொல்லைப் படுத்த தொடங்கி விட்டார். பெரும் படைகளை வடக்கு நோக்கி நகர்த்துகிறார். இவர்கள் கோதுமை விளைச்சலை அபகரிக்கிறார். உதவி செய்யும் மனிதாபிமானப் பணியாளர்களை அச்சுறுத்தி வருகிறார். இப் பகுதிகட்கு உணவு, எரிபொருள், மருந்து வகைகள் எதுவுமே செல்லாது தடுக்கின்றார். மேற்குலகமோ அவ்வப்போது கவலைப் படுவதும், உணவளிப்பதுமாக காலம் கடத்துகின்றது. இம் மக்கள்




போது சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் என்ன சூடான் சோமாலியா, அகதிகளா? நிவாரணத்தில் தங்கி வாழ?" எனக் கேட்டும் இவர்கள் ஒன்று, துருக்கி, ஈரானிடம் அகதிகளாகசெல்ல வேண்டும் அல்லது சதாமிடமே சரணடைய வேண்டும் என்ற நிலைமைக்கு தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் பி.கே.கே. போராளிகட்கு புகலிடம் கொடுக்க ஈராக்கிய குர்திசு மக்கள் தயங்குகின்றார்கள்.

இத்தகையதொரு துன்பியல் பின்னணியிலும் துருக்கிய குர்திசு மக்கள் முனைப்புடன் போராடுவது ஆறுதல் தரும் விடயம்தான். இவ்வாரமும் 18 துருக்கிய இராணுவத்தினர் போராளிகளால் கொல்லப் பட்டுவிட்டனர். கடந்த காலங்களில் துருக்கிய அரசு இம் மக்களின் தேசிய அடையாளங்களை முற்றாக அழித்து அவர்களை துருக்கியகுடும்பத்திலும் ஒரு பகுதியாக்க எடுத்த முயற்சியினைத் தடுக்கவே மார்க்சிய கருத்துள்ள அப்துல்லா ஒக்கிளான் (Abdullah Ocalan) குர்திசு தொழிலாளர் கட்சியை உருவாக்கி சிரியாவின் ஆதரவுடன் செயற்பட்டு வருகிறார் டமாஸ்கசில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் பயிற்சித் தளங்களை கொண்டுள்ள இவர்கள் அமைப்பு குர்திசு மக்களி

தோடு பழைய குழுத் தலைவர்களின் துரோகத்தை வெறுப்பதோடு- அந்நியரின் பிரித்தாளும் சதிகட்கு இரையான தம் இனத்தை எண்ணி நொந்து கொள்கிறார்.

ஏனைய குர்திசு மக்கள் தத்தம் பகுதிகட்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி கேட்கும் போது இவர் ஈரான், ஈராக் சிரியா, துருக்கி எல்லைகளில் விரியும் குர்திசுத்தான் தனி நாடடுக்காக போராடுகிறார். பெண்களையும் சமபங்கான போராளிகளாக கொண்டுள்ள இவர் இயக்கம் இன்று செயலாற்றலுடன் இருப்பதற்கு சிரியாவின் உதவியே பிரதான காரணம். ஆனால் இங்கேயும் வழமையான சிக்கல். சிரியாவிற்கோ யூபிரதீஸ் நதி நீர்ப் பங்கீடு விடயமாக துருக்கியோடு மோதல் இருப்பதால் துருக்கிக்கு அழுத்தம் கொடுக்க பேரம் பேச பி. கே. கேயை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. எனினும் அப்துல்லா ஒக்கினானின்தலைமை குர்திசு மக்களை உலகம் மறந்து விடாமல் ஞாபகப்படுத்தி வருகின்றது என்பதே உண்மை.

துருக்கின் ஏகாதிபத்தியங்களாலும் வல்லரசுகளாலும் தத்தம் அண்டை நாட்டு எதிரிகளோடு போரிட பகடைக்காயர்களாகபயன்படுத்தப்பட்ட குர்திசு மக்களின் வரலாறே அவர்

போதுதான் துருக்கியின்முதல் பெண் தலைமை அமைச்சராக பதவியேற்ற தான்சு சில்லரை (Tansu Ciller) சிக்கலுக்குள் தள்ளிவிட்டது. திடீரென பி. கே. கே. வன்முறைகளை அதிகரித்தது, அரசியல் அவதானிகளை வியப்பில் ஆழ்த்தியது. ஏனென்றால் கடந்த மார்ச் மாதம் தான் பி. கே. கே ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த மொன்றை அறிவித்திருந்தது அது இப்போது முடிவுக்கு வந்து விட்டது.

ஆகவே மீண்டும் மோதல்கள். ஆனால் இப்போது பி. கே. கே பெரும் நெருக்கடிக்குள் உள்ளது. ஏனென்றால் இவர்கள் இவ்வளவு காலமும் தமது புகலிடமாக துருக்கியின் எல்லையில் இருந்த ஈராக்கிய குர்திசு இனத்தவர் கிராமங்களை பயன்படுத்தினர் இப்போது துருக்கிக்கும் ஈராக்கிய குர்திசுதலைவர்கட்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு ஒன்றின்படி தமது பகுதிக்குள்

களுக்கு அவர்கள் வரலாறே காரணமாக அமைந்துவிட்ட கொடுமை இது.

குர்திசு மக்கள் வரலாறு காட்டும் உண்மை. குர்திசு மக்களின் தொன்மை வாய்ந்த முதுமொழியொன்றின்ஊடாக வெளிவருகின்றது. ''குர்திசு மக்களுக்கு உலகில் நண்பர்கள் கிடையாது'' என்பதே அது. அது முற்றிலும் உண்மையே. ஏனெனில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் செழிப்பான பண்டையநாகரிகத்தின் தொட்டிலான மெசப்பொத்தேமியாவின் வட கிழக்கில் வாழ்ந்த இவர்கள்உலகின் மிகப் பழைய இனக்குழுவாகும் நீர்வளத்தாலும்-எண்ணெய் வளத்தாலும் குறைவில்லாத பூமி இவர்களது. அதே இவர்களது முதலாவது எதிரியாயிற்று அதனால் இன்று தமக்கென ஒரு தாயகம் இல்லாமல் பலம் மிகக அயல் நாடுகளின் காலடியில் மிதிபடவேண்டியநிலை இவர்களுக்கு வாய்த்து விட்

இருக்கிறது? குர்திசு மக்களின் தனித்தன்மையே இன்று அவர்களை எதிரிகளாகப் பார்க்கும் நிலையை இரு நாடுகளில் உருவாக்கி இருக்கிறது. பெரும்பான்மை குர்திசு மக்கள் சுனிப்பிரிவு முசுலிம்கள் ஆவார்.

ஆனால் இவர்கள் அராபியரோ அல்லது பேர்சியரோ. அல்லது துருக்கியரோ அல்லர் இவர்கள் மொழியும் பல்வாறாக பிரிந்து இருந்தாலும் அம் மொழி அரபு-பாரசீகம்-துருக்கியச் சாயல் கொண்டது அல்ல. அதேசமயம் இன்றைய உலகில் முப்பெரும் தேசியவாத அலைக்குள்ளும் இம் மக்கள் சிக்கவேண்டி ஏற்பட்டு விட்டது துருக்கி - அராபிய-பேர்சிய தேசிய வாத அலைக்குள் இவர்கள் சிக்கி மூழ்கடிக்கப்படக்கூடிய சிறு தேசியமாக இவர்கள் இன்றிருக்கிறார்கள்.

எனவே இன்றைய நிலை இவ்வாறு இருக்கிறது. குர்திசுத்தானின் தெற்குப்

எனவேதான் குர்திசு மக்கள் கூறுகிறார்கள் 'எமக்கு நண்பர் எவரும் இவ்வுலகில் இல்லை'' என்று

எனவே இத்தகைய இக்கட்டான நிலையில் வாழும் இம் மக்கள் துருக்கியில் மட்டுமே. தமது விடிவிற்காக ஒரு தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். ஈரானில்முன்னர் போராடிய இம்மக்கள் தமக்கெனஒரு குடியரசை உருவாக்கினர். ஆனால் அது ஒரு வருடம்கூட நீடிக்கவில்லை. ஈரான் ஈராக் போரின்போது இரு நாட்டு குர்திசு இனத்தவரும் ஒவ்வொருக் கொருவர் மோதும் பகடைக்காய்களாக மாற்றப்பட்டனர். குர்திசு மக்கள்மேல் பெரும் கொடுமை புரிந்தவரில் முதலிடத்தை சதாம் உசையின் பெறுகிறார். 1970 ஆம் ஆண்டிலிருந்தே கொடிய அடக்கு முறைகள் குறிப்பாக 1975-ல் ஈராக்கிய குர்திசு இனத்தவர் மேற் கொண்ட பெரும் கிளர்ச்சியின் பின் குர்

தைப் பயன்படுத்தி சதாமோடு உடன்பாடு காண விரும்பி பேச்சுக்கள் நடாத்தியவர். அதே சமயம் ஈராக்கை துண்டாட மேற்குலகின் விசுவாசிகளான அரபு நாடுகள் விரும்பவில்லை. எனவே மீண்டும் சதாமோ இம்மக்களைமுடிந்தவரை தொல்லைப்படுத்த தொடங்கி விட்டார். பெரும் படைகளை வடக்கு நோக்கி நகர்த்துகிறார். இவர்கள் கோதுமை விளைச்சலை அபகரிக்கிறார். உதவி செய்யும் மனிதாபிமானப் பணியாளர்களை அச்சுறுத்தி வருகிறார். இப் பகுதிகட்கு உணவு, எரிபொருள், மருந்து வகைகள் எதுவுமே செல்லாது தடுக்கின்றார். மேற்குலகமோ அவ்வப்போது கவலைப் படுவதும், உணவளிப்பதுமாக காலம் கடத்துகின்றது. இம் மக்கள் தங்களைப் பாதுகாக்க ஆயுதம் வழங்கவும் இவர்கள் விரும்பவில்லை. எனவே ஈராக்கிய குர்திசு மக்கள் இன்னுமொரு துரோகத்தை இப்

திசு மக்கள் முனைப்புடன் போராடுவது ஆறுதல் தரும் விடயம்தான். இவ்வாரமும் 18 துருக்கிய இராணுவத்தினர் போராளிகளால் கொல்லப் பட்டுவிட்டனர். கடந்த காலங்களில் துருக்கிய அரசு இம் மக்களின் தேசிய அடையாளங்களை முற்றாக அழித்து அவர்களை துருக்கியகுடும்பத்திலும் ஒரு பகுதியாக்க எடுத்த முயற்சியினைத் தடுக்கவே மார்க்சிய கருத்துள்ள அப்துல்லா ஒக்கிளான் (Abdullah Ocalan) குர்திசு தொழிலாளர் கட்சியை உருவாக்கி சிரியாவின் ஆதரவுடன் செயற்பட்டு வருகிறார் டமாஸ்கசில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் பயிற்சித் தளங்களை கொண்டுள்ள இவர்கள் அமைப்பு குர்திசு மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. வித்தியாசமான தன்மைகள் கொண்ட ஒக்கிளான் குர்திசு மக்களின் பழமைவாதப் போக்கை கண்டிப்ப

லாற்றலுடன் இருப்பதற்கு சிரியாவின் உதவியே பிரதான காரணம். ஆனால் இங்கேயும் வழமையான சிக்கல். சிரியாவிற்கோ யூப்ரதீஸ் நதி நீர்ப் பங்கீடு விடயமாக துருக்கியோடு மோதல் இருப்பதால் துருக்கிக்கு அழுத்தம் கொடுக்க பேரம் பேச பி. கே. கேயை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. எனினும் அப்துல்லா ஒக்கிளானின்தலைமை குர்திசு மக்களை உலகம் மறந்து விடாமல் ஞாபகப்படுத்தி வருகின்றது என்பதே உண்மை.

துருக்கின் ஏகாதிபத்தியங்களாலும் வல்லரசுகளாலும் தத்தம் அண்டை நாட்டு எதிரிகளோடு போரிட பகடைக்காரர்களாகபயன்படுத்தப்பட்ட குர்திசு மக்களின் வரலாறே அவர்கட்குப் பகையாகிப் போனவித்தை இது தமக்குத் தாமே எதிரிகளானகொடுமை போராடும் எந்த தேசியஇனத்திற்கும் வரக்கூடாது என்பதே எமது அவா.


## கலை நிகழ்ச்சி

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மருதனார்மடக் கல்விக் கோட்டத்தினர் நடாத்தும்

### கலை நிகழ்ச்சிகள்

இடம் : யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரி
காலம்: 27-08-1993 (வெள்ளிக்கிழமை)
நேரம்: இரவு 8.00 மணி



(சி-7295)

1) "மனிதநேயம் மலர்கிறது" -நாட்டிய நாடகம்
2) "வீரபாண்டிய கட்டபொம்மன்" -நாடகம்
3) "காலத்தின் தரிசனம்" -நாடகம்

மற்றும் அபிநய நடனங்களும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்பளிப்பு: 15/-, 10\-


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 26-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10679

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

37-6615

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-5187, 42-1182, 26-8878, 22-3611.


விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்

## மாபெரும் இசை நிகழ்ச்சி

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 28-08-1993 இரவு 8-00 மணி

தமிழீழத்தின் தலைசிறந்த இசைக் குழுக்களான

★ ராஜன்ஸ்—சாந்தன் ★

இணைந்து வழங்கும்

"காற்றினிலே வரும் கீதம்"

(இசை நிகழ்ச்சி)

நிகழ்ச்சியை வாழ்த்துபவர்
**விமலாஸ்**
சாவகச்சேரி.

(5060)


## படகு விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயம்

[தென்மராட்சி]

கிளாலிக் கடலில் சண்டை இடம்பெற்றுக்கொண்டு இருக்கும் போது பொருள்கள் ஏற்றி வந்த படகுகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதியதால் படகை ஓட்டிவந்தவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவர் நாகர்கோவிலைச் சேர்ந்த படகோட்டியான இ. இரசலிங்கம் [வயது 32] என்பவரே ஆவர். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து உடன் யாழ். மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். படகில்இருந்துஇவர் கடலில் விழுந்ததாகவும் அவருடன் உதவியாகவந்த மற்றைய ஒருவர் அவரை உடன் மீட்டு கரைக்கு கொண்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## தாயகக் கனவுகள்

வையோடு பாராமல், தற்சாய்வாகப் பார்த்தால், ஒரு சமூகத்தின் உயிரோட்டம் இந்த வாக்கியத்தில் தொக்கிநிற்கின்றது மற்றும்படி இந்தப்படத்தில் உள்ள காட்சிப் படிமங்களான சில வீணைக்குச் சண்டையிடுதல் (Mouth organ) உணவைத் தட்டில் பறித்தல், பாதிதின்னும் போது சகபாடியின் உணவிலிருந்து எடுத்துச் சாப்பிடுதல் ஆகியவைகளும் ரஸிகர்களைச் சென்றடையக் கூடியதாதலால் அதற்கு மேல் எழுதாமல் அவர்களின் கருத்துக்கே விட்டுவிடுகிறேன்.

இயற்கைக் காட்சிகளைப் படமாக்குவதில் கமிராபுகுந்து விளையாடியுள்ளது. இயற்கையின் அசல் தன்மை படமாக்கப்பட்டுள்ளது. வர்ணக் கலவை சிலருக்குப் பிடிப்பதும், பிடியாததுமானதாக இருக்கலாம். அண்மைக்கால வீடியோப் படங்களின் வர்ணமும், இசையும் தங்களைப் படம் ரசிக்க விடாமல் செய்ததாக ரசிகர்கள் கூறுவதுண்டு. இந்தப் படத்தைப் பார்த்தவர்கள் அப்படி ஒன்றும் கூறவில்லை.

இறுதிக் காட்சியில் எரிவதை லாங் ஷொட்டில் இயக்குநர் கையாளுகிறார். இதனை மயங்கித்தெளிதலின் (Dissolve) மூலம் உணர்த்துகிறார். அதன் பின் போராளியின் தாய் தந்தையரின் மனத்தின் சில நிலைகள் வார்த்தைகளின் மூலம் சொல்லப்படுகின்றது.

மொத்தத்தில் வீடியோப் படத்தின் வெற்றிக்கு மூன்று அம்சங்கள் முக்கியமானவை. முதலாவது காட்சிப் படிமம். அடுத்தது ஒலி. மூன்றாவது அம்சம் கோர்வை (Editing) படத்தில் காட்சிப் படிமங்கள், ஒலி, கோர்வை ஆகியவற்றின் சேர்க்கையை புலனளவிலும், அறிவு பூர்வமாகவும் அணுகுவது பார்வையாளரின் வீடியோப்பட ரசனையைப் பொறுத்தது.

## வீரச்சாவடைந்த கடற்புலிகள்



கடற்புலி கப்டன்
**சிவா**



கடற்புலி லெப்.
**நூபாலன்**



கடற்புலி 2ஆம் லெப்.
**சுரேந்தர்**

# மக்கள் பார்வைக்கு 4கடற்படையினர்சடலங்கள்


கிளாலிக் கடலில் கடற்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட சிறிலங்கா கடற்படையினரின் நான்கு சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், இச்சடலங்களுடன் மூழ்கடிக்கப்பட்ட இரு நீருந்து விசைபடகின் எஞ்சிய பகுதிகளும் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட சடலங்களும் ஆயுதங்களும் நேற்று 'ஜனகபுர' முகாம் கண்காட்சி இடம் பெறும்கோம்பையன் மணல் பகுதியில் மக்களின் பார்வைக்குவைக்கப்பட்டன. இவை இன்று காலை 8.30 மணி தொடக்கம் கண்காட்சிப் பகுதியில் வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கரும்புலிகளின் தாக்குதலினால் பலியாகிய சிறிலங்கா கடற்படையினரது சடலங்களை தேடும் பணியில் சிறிலங்கா விமானப்படையினரும் கடற்படையினரும் தொடர்ந்து மாலைவரை ஈடுபட்டனர்.

இத்தேடுதல் முயற்சியாக விமானப்படையினரது உலங்குவானூர்திகளும் ஏனைய விமானங்களும் கிளாலி வான் பரப்பில் ஓயாமல் பறந்த வண்ணமிருந்தன. மேலும் கடற்படையின் பீரங்கிப்படகுகள் சிலவும் மேற்படி கடற்பரப்பில் தேடுதல் நடாத்தின. ஆனால் பலியாகிய கடற்படையினரின் உடல்கள் எதையும் கடற்படையினர் மீட்டதாக தகவல் கிடைக்கவில்லை



## வீர வணக்கக் கூட்டம்

வலிகாமம் கோட்டம் உடுவில் தெல்லிப்பழை வட்டத்தில் 7 ஆம், 8 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### திறப்பு விழா

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் அமைந்துள்ள யாழ்/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கணித மூலவள கற்புலசாதன நிலையம் திறந்து வைக்கப்படவிருப்பதால் வடமராட்சி கல்விக் கோட்ட சகல அதிபர்களையும், கணித விஞ்ஞான ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பாடசாலை செயலமர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பெற்றோர்களையும், நலன் விரும்பிகளையும் தவறாது கலந்து சிறப்பிக்கும்படி கோட்கப்பட்டுள்ளது.


## வீரச்சாவு



வீரவேங்கை
நிரோஜன்

மட்டக்களப்பு பாலமடு பகுதியில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த இடத்தை சுற்றிவளைத்த படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலி போராளிகள் இருவரும் இயக்க ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். கடந்த 29 ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில்

வீரவேங்கை நிரோஜன் (சரவணமுத்து வடிவேல் இன்னணி



கடற்புலிகள் கரும்புலி மேஜர் நிலவன் [வரதன்] கரும்புலித்தாக்குதல் நடத்துவதற்கு "குமரப்பா" படகில் தயாராவதை காணலாம்.

### கிளாலிக் கடலில் காவியமான

# கடற்புலி வீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

(நமது நிருபர்)

கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை நீருந்து விசைப்படகுகளில் இரண்டைத் தகர்த்தெறிந்து வீர காவியம் படைத்த இரு கடற்புலிகளின் கரும்புலிகள் உட்பட ஐந்து கடற் புலிகளிற்கு வீர அஞ்சலி செலுத்து முகமாக யாழ். குடா நாடெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருப்பதுடன் வீதியின் இரு மருங்கிலும் தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன. நேற்று அதிகாலை 1-30 மணியளவில் கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்குடன் விரைந்துவந்த கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகள் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு அவற்றை முற்றாக அழித்து வீரச்சாவடைந்த

### இரு நீருந்து

மதன் ஆகிய இருவரும் தலா 300 கிலோ வெடிமருந்து ஏற்றிய குமரப்பா, புலேந்திரன் எனப்படும் விசைப்படகுகளில் விரைந்து சென்று முன்பே திட்டமிட்டபடி கடற்படையினரின் நீருந்து படகுகள் மீது மோதினர். இரு கடற்படை படகுகள் பயங்கர ஓசையுடன்

இரு கடற் புலிகளின் கரும் புலிகள், மற்றும் இத்தாக்குதலை தொடர்ந்து இடம் பெற்ற மோதல்களின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மூன்று கடற் புலிகளுக்கும் வீர அஞ்சலி செலுத்துமுகமாகவே நேற்று நண்பகல் முதல் மக்கள் குடா நாட்டின் அனைத்து பிரதான வீதிகள், சந்திகள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் முன்பாக கறுப்பு கொடிகளைப் பறக்க விடுவதிலும், தோரணங்கள் கட்டுவதிலும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் இதேவேளை விடுதலைப் புலிகளின் முகாம்கள் முன்பாகவும் மற்றும் பிரதான இடங்களிலும் வானொலியில் சோக கீதமும் இசைக்கப்பட்டது

## படகிலிருந்து கடலில்பாய்ந்த எம்மீது புக்காரா தாக்கியது

### குண்டு வீச்சில் காயமடைந்தவர் தகவல்

(தென்மராட்சி)

'நாம் கடலில் பாய்ந்ததும் கரைசேர விடாது கடலில் புக்காராவிலிருந்து எம்மை நோக்கி ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்படியிருந்தும் என்னோடு வந்த இருவரையும் ஒருவாறுகரைசேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்த வேளை எனக்கு முன்பாக விழுந்த குண்டினால் நான் காலில் காயமடைந்தேன்'


இவ்வாறு நேற்று அல்லிபளை கடற்கரையில் புக்காரா தாக்குதலில் காலில் காயமடைந்த படகோட்டியான அன்ரனி நோயட் எமது செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் பொருள்களை ஏற்றிக் கொண்டு ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி வந்தோம், என்னோடு படகில் மூவர் இருந்தனர்.

நாம்விரைவில்கரையை சென்றடைந்து விடவேண்டும் என கிளாலியை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்த போது

### மக்களை

படகுகள் தப்பிச் செல்லவிடாது அவற்றை அழிக்க வேண்டும் என்பதற்காகவே வரதனும் மதனும் மக்கள் பாதுகாப்பிற்கு இடையூறுகள்



கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட கடற்படையினரின் சடலங்கள்

# கிளாலியில் கடற்படை படகு; புலிகள் கைப்பற்றினராம்

## சிறிலங்கா வானொலி அறிவிப்பு

(கொழும்பு)

கிளாலி கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை இடம் பெற்ற பெரியதோர் மோதலில் கடற்படை அதிகாரியொருவர் உட்பட 5 கடற்படையினர் பலியானதாகவும் ஐவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா வானொலி நேற்று அறிவித்தது.

இம்மோதலில் கடற்படை ரோந்துப்படகு ஒன்றை கடற்படையினர் இழந்துவிட்டனர் என்றும் மற்றுமோர் கடற்படைப் படகு கைப்பற்றப் பட்டுவிட்டது என்றும் அவ் வானொலி மேலும் தெரிவித்தது. இப்பகுதிக்கு விமானப் படை விமானங்கள் விரைந்துள்ளதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கடும்மோதலின்மத்தியிலும் பயணிகள் வந்து சேர்ந்தனர்

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை சிறிலங்கா கடற்படைக்கும்கடற்புலிகளுக்கும் இடையே கடும்சண்டை நடந்து கொண்டிருந்த வேளையிலும் பயணிகள்சேவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெருமளவு பயணிகள் நேற்று முன்தினம் இரவு கிளாலி- பூநகரி பாதையினூடாக பயணம் செய்தனர். சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையிலும் பயணிகள்படகுகள் மூலம் இக்கரைக்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் உக்கிர மோதல் நடைபெற்றபோதிலும் எந்த ஒரு பயணிக்கும் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (89)

## கடற்பரப்பு முழுவதும் பகல் போல் ஒளிவெள்ளம்

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை மோதல் இடம்பெற்றபோது ஆனையிறவு முகாமிலிருந்து பராவெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டன.

இதனால் கடற்பரப்புமுழுவதும் பட்டப்பகல்போல் காணப்பட்டது. கடற்புலிகளும் சிறிலங்கா கடற்படையினரும் மோதிக் கொண்டதை கரையில் நின்ற பயணிகள் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

இவ்வெளிச்சத்தில் கடற்புலிகள் கடற்படையினர் மீது துரத்தித் துரத்தித் தாக்குதல் நடாத்தியதைத் தாம் தெளிவாக அவதானித்ததாக பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

இம்மோதல் இடம்பெற்ற சிலமணி நேரமும் இடைவிடா வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. (86)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1998-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



வீரவேங்கை நிரோஜன்

மட்டக்களப்பு பாலமடு பகுதியில் விடுதலைப் புலிகள் தங்கியிருந்த இடத்தை சுற்றி வளைத்த படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலி போராளிகள் இருவரும் இயக்க ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். கடந்த 29 ஆம் திகதி அதிகாலை 5. 30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில்

வீரவேங்கை நிரோஜன் (சரவணமுத்து வடிவேல் இன்னணியடி வாழைச்சேனை), வீரவேங்கை மாணிக்கராஜ்/ கிருஷ்ணா (தங்கவடிவேல் இராமகிருஷ்ணர் சின்னபுல்லுமலை கரடியனாறு) ஆகியோரே வீரச்சாவு அடைந்த போராளிகளாவர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இதே சம்பவத்தில் முன்பு வெளிவந்த கவிதரன் என்ற போராளியின் பெயர் வீரச்சாவு என தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.



வீரவேங்கை மாணிக்கராஜ் (கிருஷ்ணா)

★

மட்டக்களப்பு ஆயித்தியமலை அரசடிச்சேனையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள், இயக்க ஆதரவாளர் சிவனேசபிள்ளை (நாவற்காடு விழாவெட்டுவான் மட்டு) வீரச்சாவை தழுவிக் கொண்டார் இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஒத்திவைப்பு

இன்று கைதடியில் நடைபெறவிருந்த சத்தியவான் சாவித்திரி இசைநாடகம் அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

வான் இரு மருங்கிலும் தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்குடன் விரைந்துவந்த கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகள் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு அவற்றை முற்றாக அழித்து வீரச்சாவடைந்த

## இரு நீருந்து

மதன் ஆகிய இருவரும் தலா 300 கிலோ வெடிமருந்து ஏற்றிய குமரப்பா, புலேந்திரன் எனப்படும் விசைப்படகுகளில் விரைந்து சென்று முன்பே திட்டமிட்டபடி கடற்படையினரின் நீருந்து படகுகள் மீது மோதினர். இரு கடற்படை படகுகள் பயங்கர ஓசையுடன் வெடித்துச் சிதறியது.

நாகதேவன்துறை பகுதியில் இருந்து புறப்பட்ட சிறிலங்கா கடற்படையினர் 5 நீருந்து விசைப்படகுகளில் வந்த கடற்படையினருக்கும் மக்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும் இடையில் சுமார் மூன்று மணிநேரமாக கடும் கடற்போர் இடம் பெற்றது. அதிகாலை 1. 55 மணி முதல் நடைபெற்ற இந்த கடற்போரின் போது அதிகாலை 2. 05 மணியளவில் முதலாவது கரும்புலித்தாக்குதல் நடைபெற்றது இதனால் சிறிலங்கா கடற்படையின் நீருந்து விசைப்படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மோதலின் போது அதிகாலை 4. 00 மணியளவில் இரண்டாவது கரும்புலி தாக்குதல்நடைபெற்றது. இதனால் மற்றோர் நீருந்து விசைப்படகு மூழ்கடிக்கப்பட்டது.

மற்றொரு கடற்படையினரின் படகு புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலுக்கு உள்ளாகியகடுத்த சேதத்துடன் பின்வாங்கி சென்றது.

## அகோர

யான முல்லைத்தீவைச்சேர்ந்த வே. அன்ரனி றோபெட் [34] என்பவர் காலில் காயமடைந்தார். காலை 7. 30 மணியளவில் இப்பகுதியில் அவ்ரோ விமானம் ஒன்றும் குண்டுத் தாக்குதலை நடத்தியது இதில் கரையில் நின்ற சில படகுகள் சேதமடைந்தன.

இதேவேளை பூநகரி முகாமிலிருந்தும் கிளாலிப்பகுதியை நோக்கி படையினர் கடும் எறிகணைத்தாக்குதலை நடத்தினர் சில எறிகணைகள் கொடிகாமம் பகுதியிலும் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதல்களினால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்ற வண்ணமிருந்தனர். (86)

# படகிலிருந்து கடலில்பாய்ந்த எம்மீது புக்காரா தாக்கியது

## குண்டு வீச்சில் காயமடைந்தவர் தகவல்

(தென்மராட்சி)

'நாம் கடலில் பாய்ந்ததும் கரைசேர விடாது கடலில் புக்காராவிலிருந்து எம்மை நோக்கி ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்படியிருந்தும் என்னோடு வந்த இருவரையும் ஒருவாறுகரைசேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்த வேளை எனக்கு முன்பாக விழுந்த குண்டினால் நான் காலில் காயமடைந்தேன்'

இவ்வாறு நேற்று அல்லிபளை கடற்கரையில் புக்காரா தாக்குதலில் காலில் காயமடைந்த படகோட்டியான அன்ரனி றோபட் எமது செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்நாம் பொருள்களைஏற்றிக் கொண்டு ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி வந்தோம். என்னோடு படகில் மூவர் இருந்தனர்.

நாம்விரைவில்கரையை சென்றடைந்து விடவேண்டும் என கிளாலியை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்த போது திடீரென எமக்கு மேலாக புக்காரா விமானங்கள் வந்தன. அவற்றைக் கண்டநாம்கடலில் குதித்து விட்டோம் எனினும் அவை எம்மை நோக்கி ரொக்கட் தாக்குதலை நடத்தின. இதில் ஒரு ரொக்கட் குண்டின் துண்டு எனது காலில் பாய்ந்தது. இதனால் நான் சில நிமிடங்களில் மயக்கமடைந்து விட்டேன் பின்னர் போராளிகள் எனக்கு முதலுதவி அளித்து என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர் என்றார்

## மக்களை

படகுகள் தப்பிச் செல்லவிடாது அவற்றை அழிக்க வேண்டும் என்பதற்காகவே வரதனும் மதனும் மக்கள் பாதுகாப்பிற்கு இடையூறுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக தம்மை அர்ப்பணித்து இத் தாக்குலை வெற்றிகரமாக முடித்தனர். கரும்புலித் தாக்குதலுடன் கடற்புலிகளின் தாக்குதலும் இரவு 1. 55 மணி முதல் காலை 5, 05 வரை நடைபெற்றது.

நான்கு படையினரின் சடலங்கள் இதுவரை எம்மால் மீட்கப்பட்டன. மேலும் பல சடலங்கள் 24 மணித்தியாலங்களின் பின் மிதக்கலாம். எம்மை பொறுத்த வரையில் 10க்கு மேற்பட்ட படையினர் இதில் பலியாகியுள்ளனர். இரு 50கலிபர்களும் அவற்றிற்கான ரவைகளும் எம்மால் கைப்பற்றப்பட்டன. இரு 50கலிபர்கள் ஒரே சமயத்தில் எடுக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

தாக்கப்பட்ட இரு படகுகளும் மூழ்கடிக்கப்பட்டு விட்டன. எமது கரையிலிருந்து $3\frac{1}{2}$ மைல் அவர்களதுகரையிலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் இரு படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன கரும்புலித்தாக்குதலுக்கு பயன்பட்ட படகுகள் 30 கடல் மைல் வேகம் கொண்டவை.

தாக்குதல் நடந்த நேற்று மக்களின் படகு சேவை இடையூறு இன்றி நடந்தது. கிளாலியிலிருந்து 2250 மக்கள் -ஆலங்கேணியிலிருந்து 2250க்கும் மேற்பட்ட மக்கள் தமது பயணத்தை தொடர்ந்தனர்.

அண்மையில் எமது பாதுகாப்பு முடிந்த பின்னர் இயந்திரக்கோளாறு காரணமாக வந்து கொண்டிருந்த படகிலிருந்த மக்கள் படையினரால் கொல்லப்பட்டனர். கடல் நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்த லெப். கேணல் சாள்ஸ் இன் இழப்பு என்பவற்றிற்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்பதற்காக இவ்வாது கடற்புலிகள் செயற்பட்டனர் என இரு சூசை மேலும் தெரிவித்தார்.

## ம. வீரர்களின்

பகுதியூடாக சவச்சாலை சந்தியில் 12.00 மணிமுதல் 12.30 மணிவரையும் வைக்கப்படும். அங்கு மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து நாவாந்துறை. ஐந்துசந்தியூடாக எடுத்துச் செல்லப்பட்டு வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் 1.30 மணிமுதல் 2 00 மணிவரையும் வைக்கப்பட்டபின் காங்கேசன்வீதி, கொக்குவில், திருநெல்வேலி, பலாலிவீதி, உரும்பராய்வீதி, கோப்பாய், பருத்தித்துறை வீதியூடாக நெல்லியடிச் சந்தியில் மாலை 3.30 மணி முதல் 4 00 மணி வரையும் வைக்கப்பட்டபின் பருத்தித்துறைவீதி, கடற்கரை வீதியூடாக சக்கோட்டையில் மாலை 4 45 மணிமுதல் 5 00 மணிவரையும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபின் கடற்கரை வீதியூடாக வல்வெட்டித்துறை மதவடி உடுப்பிட்டி வீதியூடாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தை சென்றடையும்.

அங்கு விசேட மேடையில் மக்கள்அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்ற பின் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் கடற் கரும்புலிகளின் நினைவுக் கற்கள் நாட்டலும், கடற்புலிகளின் வித்துடல்களும் விதைக்கப்படும்.